Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்


அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணுடி விற்பனையாளரும்
45,மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி என் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 25 ஆம் நாள் றம்ழான் பிறை 11 (7-2-63) வியாழக்கிழமை 357

சதி வழக்கு

# பிஸ்கால் அதிகாரிக்கு நிதிபதி எச்சரிக்கை

## ஜூரிமார்சபை கலைக்கப்பட்டது

### வடபகுதி அசைஸ் முதல் விசாரணையில்!

யாழ்ப்பாணம், வியாழன்

**நேற்று ஆரம்பமான வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் முதலாவதாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கொலை முயற்சி வழக்கின் விசாரணை நிறுத்தப்பட்டு ஜூரிமார் சபையை நீதியரசர் கலைத்து விசாரணையை ஒத்திவைத்தார்.**

வடபகுதி அசைஸ் விசாரணைகள் நேற்று நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் ஆரம்பமாகின. நீதியரசர் நல்லூரில் வழிபாடாற்றிய பின் அசைஸ் விசாரணைக்கு வந்தபோது சார்ஜண்ட் மேஜர் பக்கீர் தலைமையில் பொலிசார் அணிவகுத்து நின்று மரியாதை செய்தனர். வடபகுதி பிஸ்கால் பிரதம அதிகாரியான வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி நீதியரசரிடம் தற்போது விசாரணைக்கு உள்ள வழக்குகளின் விவரங்களை ஒப்படைத்தார்.

பூநகரி கொலை முயற்சி வழக்கு முதலில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

பூநகரி மட்டுவில் நாட்டைச் சேர்ந்த இராமநாதி பெண் செல்லம்மாவுக்கு 1960-ம் ஆண்டு ஆவணி மாதம் 23-ம் திகதி நஞ்சு கலந்த கோப்பியைக் கொடுத்து கொலை செய்ய முயற்சித்ததாக அதே ஊரைச் சேர்ந்த பொன்னம்மா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்கு காது கேளாத காரணத்தால் கேள்வி பதில் அவரிடம் பெறுவது கஷ்டமாக இருந்தது. அரசாங்க பரிசோதகர் திரு. செல்லையா சற்குணனந்தன், டாக்டர் சந்திரா அபயசேகரா, ஷெல் கம்பெனி வடபகுதி மானேஜர் ஆனந்த வில்வராஜர், செல்லம்மா ஆகி

(8-ம்பககம் பார்கக)

## வழக்கறிஞரைத் தடுத்ததாக கோர்ட்டில் ஜி. ஜி. புகார்

### சுகவீனம் காரணமாக 8-ம் எதிரி ஆஜராகவில்லை

கொழும்பு, புதன்

**இன்று காலை ஆரம்பமான சதி வழக்கு விசாரணையின் போது வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்த ஒரு புகாரைத்தொடர்ந்து, ஒரு பிஸ்கால் காவலாளியையும், அவரது மேலதிகாரியையும் நீதிபதி ஸன்சோனி கண்டித்தார். தனது உதவி வழக்கறிஞர் திரு. கன்னங்கரா, எதிரிகள் ஒருவருடன் பேசுவதை 2-ம் இலக்க காவாலளி தடைசெய்ததாக திரு. பொன்னம்பலம் புகார் கூறினர்.**

வழக்கு விசாரணை ஆரம்பமாவதற்கு 5 நிமிடங்களுக்கு முன் வழக்கம்போல் எதிரிகள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்தனர். மேஜர் லயோலாவின் 8-ம் இலக்க ஆசனம் காலியாக இருந்தது. 8-ம் எதிரி சுகவீனமுற்றிருப்பதாயும், அதனல் கோர்ட்டுக்கு வர முடியவில்லையென்றும் நீதிபதிகளிடம் திரு. ஜி. ஜி. அறிவித்தார். வேறு கோளாறு எதுவும் நேராமலிருந்தால், பெப்ரவரி 11-ம் திகதி அவர் கோட்டுக்கு வரமுடியும் என வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், 8-ம் எதிரி கோர்ட்டில் ஆஜராகும் வரை வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டும் என திரு. சன்சோனி கூறினர். அசல் வழக்கு இன்னும் ஆரம்பமாகவில்லையாதலால், விசாரணையைத்தொடர்ந்து நடத்துவதில் நமக்கு ஆட்சேபனை இல்லை என திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது பற்றி அட்டேர்ணி ஜெனரலின் கருத்தை வினவியபோது, வழக்கைத் தொடர்ந்து நடத்துவதில் தமக்கும் ஆட்சேபனை இல்லை என அவர் தெரிவித்தார். பின் அவர்களைத் தொடர்ந்து பேசுமாறு நீதிபதி கேட்டுக்கொண்டார்.

திரு.பொன்னம்பலம் நீதிபதிகளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு காவலாளியின் விஷயத்தைக் கோர்ட்டில் கவனத்திற்குக் கொண்டு வந்தார். பிஸ்கால் காவலாளியையும், பிஸ்கால் அதிகாரியையும் விசாரித்த பின் கோர்ட்டில் தங்கள் கட்சிக்காரர்களைச் சந்திக்க வழக்கறிஞர் அனுமதிக்கப்பட வேண்டும் என நீதிபதி அவர்களுக்கு உத்தரவிட்டார்.

## காஷ்மீர் இரண்டாக பிரிக்கப்படுமா?

### பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. புட்டோ சூசகம்

ராவல்பிண்டி, பெப். 6

இந்தியாவும்,பாகிஸ்தானும் காஷ்மீரைப் பிரித்துக்கொள்வதுபற்றி அடுத்த வெள்ளிக்கிழமை இங்கு நடைபெறும் இந்தோ—பாகிஸ்தான் மகாநாட்டில் ஆராயவிருப்பதாக பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. புட்டேடோ கூறினர்.

பாகிஸ்தான் தூதுகோஷ்டித்தலைவராக திரு. புட்டோ கராச்சிக்குப் புறபபட்டுச் சென்ருர். இப்பேச்சுவார்த்தைகள வெள்ளிமுதல் ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறும்.

இர்தியத் தூதுகோஷ்டித் தலைவர் திரு. சுவர்ணசிங், இன்று பிரதமர் நேருவைச் சந்தித்தார். நாளை அவர் பேச்சுவார்த்தைசளுக்காக கராச்சி செல்வார். அவருடன் பாகிஸ்தானிலுள்ள இந்திய ஹைகமிஷனர் உட்பட, இதர அங்கத்தினர்களும் ஆராய்ச்சி செய்வார்கள். இருநாடுகளுக்குமிடையே 3வது தடவையாகக் இட்பேச்சு நடக்கிறது.

## நல்லூரில் நீதியரசர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்த[illegible] அசைஸ் விசாரணைகள் நே[illegible] ஆரம்பமாயின. இதற்குமுன் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தரா[illegible]ஜா நேற்றுக்காலை நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு விஜயஞ்செய்து சுவாமி தரிசனம் செய்தார்.முருகப்பெருமானுக்கு பூஜை ஆராதனைகள முடிந்தபின் நீதியரசரிடம் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் யாழ்ப்பாண[illegible] நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம், மாஜிஸ்டிரேட் அரசுவால்டன் ஆகியோரும் பல வழக்கறிஞரு[illegible] மேயர் டாக்டர் எஸ். ஏ. தர்ம லிங்கமும் கலந்து கொண்டனர்.

## மந்திரிகள் எவருமே சபைக்கு வரவில்லை

### மூன்று நிமிடங்களில் பார்லிமெண்ட் ஒத்திவைப்பு

கொழும்பு, வியாழன்

**இலங்கை பார்லிமெண்ட் சரித்திரத்திலேயே என்றுமில்லாத வகையில் நேற்று சபை மூன்று நிமிடங்கள் மாத்திரம் நடைபெற்றது. உபசபாநாயகர் திரு. ஹியு பெர்ணன்டோ சபை ஆரம்பமான மூன்று நிமிட நேரத்தின் பின்னர், இன்று பிற்பகல் இரண்டுமணிக்கு சபை நிகழ்ச்சிகள் ஒத்தி வைக்கப்பட்டிருப்தா அறிவித்தார்.**

நேற்று பிற்பகல் பார்லிமெண்ட் கூடியபோது மந்திரிகள் எவரும் சபையில் இல்லை என்பதை மூன்று எம்.பிக்கள், தலைமைவகித்த உபசபாநாயகர் திரு. ஹியு பெர்ணன்டோவிடம் தெரிவித்தனர். திருவாளர்கள் கே. எம். பி. ராஜரத்ன, டபிள்யு. தகநாயக்கா, டபிள்யு. டி. டி' சில்வா ஆகியோரே சபையில் மந்திரிமார் பிரசன்னமாயிருக்காதது பற்றி ஆட்சேபம் தெரிவித்தவர்களாவர்.

சபை கூடியபோது நில அபிவிருத்தி உதவி அமைச்சர் திரு. தென்னக்கூன் மாத்திரமே பிரசன்னமாயிருந்தார். அவர் நிகழ்ச்சி அட்டவணையில் கேட்கப பட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்க ஆரம்பித்து முதல் கேள்விக்கு பதிலளிக்க முயலும் தறுவாயில, குறிப்பிட்ட மந்திரியைக் கேட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

பரந்தன், குமரபுரம் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கத்திற்கு ஒரு நெற்கிட்டங்கி கட்டுவதற்காக தென்யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கேள்விப்பத்திரங்கள் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ந் திகதி காலை 12 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் உறையில் இடதுபக்க மூலையில் "நெற் கிட்டங்கிக்கான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கி (பரந்தன் கிளை)யில் ரூபா 50 கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கட்டப்பட்ட பற்றுச்சீட்டு காண்பிப்பதன்பேரில் பரந்தன் தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் அலுவலகத்தில் 1963-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ந் திகதி காலை 10 மணிவரையும் கேள்விப்பத்திரப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கட்டிடத்தின் மாதிரிப்படத்தைத் தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம். இவ்வேலையை ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள் என்பதற்குப் போதிய அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கே இதற்குரிய பத்திரங்கள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தாம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத் தொகையில் 5 வீதத்தைப் பிணைப்பணமாகக் கட்ட வேண்டும். கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் வேலையைஏற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்) மு. சின்னத்தம்பி,
தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு
அபிவிருத்தி உதவி
ஆணையாளர்.

கூட்டுறவு அலுவலம்,
பரந்தன்,
25-1-62. 680

## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## "நாங்கள் போர் வெறியர்களா?"

மோஷி, பெப். 5

தங்கனீகாவில் நடைபெறும் ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டுக்கு திரு. நேரு அனுப்பிய செய்தியை பிரதிநிதிகள் பலத்த கரகோஷத்துடன் வரவேற்றனர்.

சீனப்பிரதிநிதி இம் மகாநாட்டில் பேசும் போது, உலகில் பெரிய பிரச்னைகளை ஒன்று அல்லது இரண்டு நாடுகள் தீர்க்க முயல்வது இக்கால சிந்தனைக்கு ஏற்றதல்ல என்று கூறினர். சீனவை போர் வெறி பிடித்த நாடு என ஏகாதிபத்திய நாடுகளும், பிற்போக்கு நாடுகளும், குற்றஞ்சாட்டுகின்றன என்றும் அவர் கூறினர்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# யாழ்ப்பாணத்தில் சுதந்திரதினம்

'ஈழநாடு'பத்திரிகையின் முதற்பக்கத்தில் தமிழரசுக் கட்சியின் பிரசார ஏடு என்று போட்டால் பொருத்தமாயிருந்திருக்குமென்று கருதுகிறேன். ஈழநாடு கட்சிச் சார்பற்ற பத்திரிகையென்றுகூறிக்கொண்டு, உண்மைக்கு மாருக, தமிழரசுக் கட்சிக்கு ஆதரவாக எழுதுகிறது. இதனல், தமிழ் மக்களுக்குத்தான் அதிக நஷ்டம்.

சுதந்திரதினத்தன்று தமிழ் மாகாணங்களில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது உண்மைதான். ஆனல் ஒரு சில எட்டப்பன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் கடைகளை முற்ருகத் திறந்து வியாபாரம் நடத்தினர்கள். இப்படிப்பட்ட துரோகிகளைப் பொது மக்களுக்கு அம்பலப்படுத்துவது பத்திரிகைகளின் கடமை. இவர்கள் கடைகளைத் திறப்பார்கள். இவர்களை அம்பலப்படுத்தி, பொதுமக்களுக்குச் சுட்டிக் காட்டாவிட்டால் ஒவ்வொரு வருடமும், இவர்கள் கடைகளைத் திறப்பார்கள். இவர்களை அம்பலப்படுத்தாத காரணத்தால் உங்கள் பத்திரிகையும், இவர்களின் செய்கைக்கு ஆதரவளிக்கிறது என்று கருதவேண்டியிருக்கிறது. மேலும் தமிழரசுக் கட்சியிலும், சில போலி ஆதரவாளர்களுண்டு. மேடைகளிலே இவர்கள் உரிமைபெற வானளாவக்கத்துவார்கள். துக்கதினத்தில், மற்றும் கடைகள் பூட்டியிருக்கும் சமயத்தில் இவர்கள் கடைகளைத் திறந்து கொள்ளை லாபம் அடிப்பார்கள்.

கடைகளைப் பூட்டியவர், பொலிஸார், கறுப்புக்கொடி தொங்கவிட்டால் கடைகளை சேதப்படுத்திவிடுவார்கள் என்ற பயத்தினல், கறுப்புக் கொடி தொங்கவிடவில்லை. இப்படிப் பயந்தால் நமது இலட்சியம் நிறைவேறிவிடுமா? உடைமைகள் போய் விடுமென்று பயப்படுபவர்கள் உயிரைத் துரும்பென மதித்து அறப்போரில் ஈடுபட எப்படி முன் வருவார்கள்?

சாவகச்சேரியில் ஒரு கறுப்புக்கொடியும் காணப்படவில்லை.மூன்றுதேநீர்க்கடைகள் முற்ருகத்திறந்து வழக்கம் போல வியாபாரம் நடந்தது. மீன் சந்தையில் மக்கள் வழக்கம்போல வந்து வியாபாரம் செய்தார்கள். இந்த விஷயத்தை உங்கள் பத்திரிகை வெளியிடாமல், சாவகச்சேரியில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டதென்று உண்மைக்கு மாருக எழுதியது சரியா?

பளையிலும் எல்லாக் கடைகளும் திறந்து வழக்கம்போல் வியாபாரம் நடந்தது. இதை உங்கள் பத்திரிகை வெளியிடவில்லை. உண்மையை உள்ளபடி எழுதினல்தானே, தலைவர்களும், ஆதரவில்லாத இடங்களில் கிளைகளை ஆரம்பித்து பிரசாரம் செய்வார்கள், மக்கள் உணர்ச்சிகளை தட்டி எழுப்புவார்கள்.

கொடிகாமத்தில் வழக்கம் போல சந்தை கூடியது. சந்தியில் கட்டப்பட்டிருந்த ஒரே ஒரு கொடியை, பொலிஸார் அகற்றினர். காலையில் மக்களை சிலர் சந்தைக்குள் போக விடாமல் தடுத்தபோதிலும், மத்தியானம் ஏராளமான மக்கள் சந்தையில் வியாபாரம் செய்தார்கள். சந்தையில் இரு கடைகளும், புகையிரத நிலையத்திற்கு அருகேயுள்ள கடையும் முற்ருகத் திறந்து வியாபாரம்நடத்தியது. பெரும் முதலாளிகளே லாபத்தை எண்ணி கடைகள் திறக்கும்போது அன்றுஉழைத்து வயிறுவளர்க்கும் ஏழைமக்களைப் பயமுறுத்தி சந்தைக்கு வராமல் தடுப்பது தான் ஜனநாயகமா.

கொடிகாமத்தில் துக்கம் அனுஷ்டித்ததாகவும் சிலரின் வேண்டுகோளினல், சந்தைக்கு வந்த பலர் திரும்பினரென்றும் உங்கள் பத்திரிகையில் எழுதியிருந்தது. சில சண்டியர்கள் வந்து வேண்டுகோள்விடவில்லை, ஏழைகளைப் பயமுறுத்தினர்கள்; கட்டாயமாகக் கடையைப் பூட்டச்சொன்னர்கள். கம்யூனிஸ்ட்நாட்டில் நடக்கவேண்டிய நிகழ்ச்சி, ஜனநாயக நாட்டில் நடககலாமா? உண்மையை மறைக்கலாமா? இதுவா பத்திரிகா தர்மம்?

உண்மைக்குமாருக எழுதுவதால், தலைவர்கள், தங்களுக்கு எங்கும் ஆதரவு இருப்பதாக எண்ணி போராட்டகாலத்தில் ஏமாந்துவிடுவார்கள்.

ஆதலால் இனிமேலாவது உள்ளதை உள்ளபடி எழுதி, ஆதரவு இல்லாத இடங்களையும், போலித் தொண்டர்களையும், தலைவர்களுக்குச் சுட்டிக் காட்டிதமிழ்மக்களுக்குத்தொடர்ந்து தொண்டு செவீர்களென எதிர்பார்க்கிறேன்.

கொடிகாமம் கே. வீரசிங்கம்


### கிராமச்சங்கங்கள் கட்டளைச் சட்டம்

### 17ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

N265- 1961இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்(அத்தியாயம் 257) 17(5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி வடபிரதேசம் (மேல்) யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான், இதன் அட்டவணையின் பத்தி I இல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சங்கத்தின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி II இல் உள்ள ஏற்றபதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் பத்தி III இல் உள்ள ஏற்றபதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி iv இல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வட பிரதேசம்(மேல்)

அட்டவணை

| பத்தி I | பத்தி II திகதி | பத்தி III நேரம் | பத்தி iv இடம் |
| --- | --- | --- | --- |
| தெல்லிப்பழைக்கிராமச்சங்கம் | 14.2.1963 | 11-00 மு. ப. | தெல்லிப்பழைக்கிராமச் சங்கம். |


## வர்க்குறுதி எங்கே?

தேசியச் கல்வியாணைக்குழுவின் இறுதியறிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் வர்த்தக ஆசிரியபயிற்சி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சென்ற ஆண்டு சிங்களத்தில் மாத்திரம் வர்த்தக ஆசிரியர் பயிற்சி நடைபெறும் என்று அரசாங்க வர்த்தமானி அறிவித்தலைக் கண்ணுற்றதும் தமிழ்பேசும் பிரதிநிதிகள் அனைவரும் (முக்கியமாக கோப்பாய் பிரதிநிதி திரு. மு. பாலசுந்தரம்) தமிழ் பேசும்மக்களுக்கு வர்த்தகபாடங்களில் பயிற்சி அளிக்கப்படவேண்டுமென்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர்.

கல்விமந்திரி நேரடியாகவும் கடிதமூலமும் பதிலிறுக்கும்பொழுது 1963-ம் ஆண்டிலிருந்து தமிழில் இப் பயிற்சி வகுப்பை கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவித்திருந்தார்.

அகில இலங்கை வர்த்தக கலைமன்றமும் இது விஷயமாக கல்விமந்திரி, கல்வி இலாகா நிரந்தரக்காரியதரிசி ஆகியோரிடம் தொடர்பு கொண்டிருந்தது. 1957-ம் ஆண்டிலிருந்து சிங்களமொழியில் வர்த்தக பயிற்சி பெறுவதற்கான ஒழுங்குகளை சிங்கள ஆசிரியகலாசாலைகளில் புகுத்தியிருந்த அரசாங்கம் இதுவரைகாலமும் தமிழ்மாணவர்களுக்கு அந்த வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து உடுவில் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கமும் கோப்பாய் பிரதிநிதி திரு மு. பாலசுந்தரமும் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறினர்கள். தமிழ்ப் பிரதிநிதிகளின் இடைவிடாத முயற்சியின் காரணமாகவும் அகில இலங்கை வர்த்தக கலைமன்றத்தின் தூண்டுதலின் காரணமாகவும் 1963-ம் ஆண்டிலிருந்து தமிழ்பிரதேசத்தில் வர்த்தக கலைப்பயிற்சி வகுப்புக்களை நடாத்த கல்விமந்திரி ஒப்புச்கொண்டிருந்தும் 1-2-63-ல் வெளிவந்த அரசாங்க வர்த்தமானியில் தொடர்ந்தும் சிங்களத்திலேயே பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கான விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இச்செயல் தமிழ்மக்களை வேண்டுமென்றே தொடர்ந்தும் அவமானத்துக்குட்படுத்துவதாக விருக்கிறது. தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு எழுத்துமூலம் அளித்த வாக்குறுதியையும் மாற்றி கல்விமந்திரியும் அவரது நிரந்தரக் காரியதரிசியும் தமிழ்மக்களைப் புறக்கணித்திருக்கிருர்கள். இலங்கையில் வாழும் மக்கள் சிங்களமக்களாயினுஞ்சரி, தமிழ்மக்களாயினுஞ்சரி ஆரம்பபாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை சுயமொழியில் கல்விபெற வசதி செய்யப்பட்டிருப்பதாக அரசாங்கம் அடிக்கடி பிரசாரம் செய்திருந்தும் மக்களுக்கு வர்த்தகபாடங்களில் உயர்கல்வியளிக்க மறுப்பதன் காரணம் என்ன? இது தற்செயலாக ஏற்பட்ட பிழையா அல்லது வேண்டுமென்றே நேர்ந்துவிட்ட பிழையா? அகில இலங்கை வர்த்தக கலாமன்றம் கௌரவ கல்விமந்திரி அவர்களிடமும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடமும் இவ் விஷயத்தை அவசரகவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

மா. புவனேந்திரன்,
செயலாளர்.
வர்த்தக கலைமன்றம்.
யாழ்ப்பாணம்.

## 'தபால் பெட்டிகள் அவசியமில்லை'

கொழும்பு, புதன்

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தபால் பெட்டிகளை வைப்பதற்கு போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் உதவ முன்வந்திருந்தும் பல ஆஸ்பத்திரிகள் இந்த உதவியைப் பயன்படுத்திக்கொள்ளவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார டைரக்டரின் கருத்துப்படி போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் மூன்று மாதங்களுக்கு முன்னரே இவ்வித ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தும் பல ஆஸ்பத்திரிகள் இது விஷயத்தில் அக்கறை காட்டாததால் இவ்விதம் தபாற் பெட்டிகள் அங்கு வைக்கப்படவில்லை.

இப்பொழுது பல ஆஸ்பத்திரிகள் தபாற் பெட்டிகள் அவசியமில்லையெனத் தெரிவித்துள்ளன.

இவ்விதம் தபாற் பெட்டிகள் ஆஸபத்திரிகளில் இருப்பதால் ஆஸ்பத்திரியிலிருக்கும் நோயாளர் விரைவில் குணமாக இது உதவுவதாக இருக்குமென சில ஆஸ்பத்திரி அதிகாரிகள் கருதுகின்றனர்.

34 ஆஸ்பத்திரிகளில்மட்டுமே இப்பொழுது தபாற் பெட்டிகள் இருக்கின்றன.

## சைவபரிபாலனசபை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 74-வது வருடாந்தக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் சைவமக்களுக்கு சமய உரிமைகள் தடை செய்யப்படுவதனைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்படவிருப்பதாகத் தெரிகிறது.

## நெற்பயிர் வளர்ச்சிக்கு நாதசுர இசை

### தென்னட்டில் பரிசோதனை

சிதம்பரம், பெப். 5

நாதசுர இசையைக்கொண்டு நெற்பயிர் வளர்ச்சிபற்றிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட ஒரு வயலை அண்ணமலை சர்வகலாசாலை உப அத்தியட்சகர் டாக்டர் சி. பி, ராமஸ்வாமி ஐயர் பார்வையிட்டார்.

கொள்ளிடத்தில் திரு. எஸ். வி. சுப்பிரமணியபிள்ளை என்பவர் தமது வயலில் இந்தப் பரிசோதனையை மேற்கொண்டுள்ளார். டாக்டர் ராமஸ்சுவாமி ஐயருடன் பல்கலைக் கழக ரிஜிஸ்தார் திரு. டி. டி. மீனட்சிசுந்தரம்பிள்ளையும் சென்று வயலைப் பார்வையிட்டார்.

பாஸ்கரராஜபுரத்தில் இசை மூலம் வாழை வளர்ச்சிபற்றி பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட ஒரு தோட்டத்தையும் டாக்டர் சி. பி. பார்வையிட்டார். திரு. சீனிவாச ஐயர் இந்தப் பரிசோதனையை நடத்துகிருர்.

## "இரு பெரும் புலவர்கள்"

### இன்று வானெலியில் பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

'இரு பெரும் புலவர்களின் சந்திப்பு' என்ற தலைப்பில் இருபாலைச் சேனதிராய முதலியாரையும் சுன்னகம் முத்துக்குமார கவிராயரையும்பற்றிய ஒருபேச்சு இலங்கை வானெலியில் இன்று இரவு 7 மணிக்கு ஒலிபரப்பாகிறது. சுன்னகம் திரு. கு. அம்பலவாணபிள்ளை இப்பேச்சை நிகழ்த்துகிருர்.

## ரஷ்யா ஆட்சேபம்

மாஸ்கோ, பெப். 6

மாஸ்கோவிலுள்ள மேற்கு ஜெர்மன் ஸ்தானிகரையும் பிரஞ்சுஸ்தானிகரையும்ரஷ்யவெளிவிவசார அமைச்சர் நேற்று அழைத்து இருவரிடமும் இரு குறிப்புக்களைச் சமர்ப்பித்தார். குறிப்பின் விபரங்கள் வெளியிடப்படவில்லையாயினும் பிரான்சும் மேற்கு ஜெர்மனியும் சமீபத்தில் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு சோவியத் யூனியன் ஆட்சேபனை தெரிவித்துள்ளதாக கருதப்படுகிறது.

## லாகோஸில் வேலைநிறுத்தம்

லாகோஸ், பெப். 6

சம்பள உயர்வு கோரி நைஜீரிய தலைநகரான லாகோஸில் 4000 துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளனர், அரசாங்கம் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டதால் 16,000 துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வார்களென்று துறைமுகத் தொழிலாளர் யூனியன் தெரிவித்தது.

## விசாரணை செய்ய கோரிக்கை

சிங்கப்பூர், பெப் 6

சிங்கப்பூரில் சென்ற சனிக்கிழமை பெரிய அளவில் இடதுசாரியினரும் பத்திரிகையாளரும் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக பகிரங்க விசாரணை நடத்தவேண்டுமென சிங்கப்பூர் தேசிய பத்திரிகையாளர் யூனியன் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

## கராமே திரும்பினர்

பீரட், பெப். 6

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சுற்றுப்பிரயாணம் செய்த லெபனன் பிரதமர் திரு. ரஷீத் கராமே தமது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு பீரட் திரும்பினர்.

# எல்லைபிரச்னைக்கு ஆசிய-ஆபிரிக்கசமரசகமிட்டி

## மோஷி மகாநாட்டில் யோசனை; இந்திய பிரதிநிதி ஆதரவு

### சென்னை நகர மேயராக குசேலர் போட்டியின்றி மீண்டும் தெரிவு

மோஷி, பெப்ரவரி 6

ஆசிய — ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலுள்ள எல்லைத் தகராறுகளுக்குத் தீர்வுகாண்பதற்கு கமிட்டியொன்றை நியமிக்கவேண்டுமென்று இங்கு நடைபெற்றுவரும் மூன்ருவது ஆசிய - ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட யோசனையை இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளும் இந்தியப் பிரதிநிதி திரு. சமன்லால் ஆதரித்தார்.

### எல்லைப் பிரச்னைக்கு கமிட்டி

ஆசிய — ஆபிரிக்க நாடுகளுக்குள் எல்லைத் தகராறுகள் பல இருக்கின்றனவென்றும் இவைகளில் ஒன்றுதான் இந்தியா — சீனப் பிரச்னையென்றும் கென்யாப் பிரதிநிதி மகாநாட்டில் கூறினர். ஆசிய - ஆபிரிக்க நாடுகளுக்கிடையில் உள்ள எல்லைத் தகராறுகளை சமாதானமாகத் தீர்ப்பதற்கு கமிட்டியொன்று நியமிக்கலாம் என கென்யாப் பிரதிநிதி யோசனை தெரிவித்தார். இந்த யோசனையை இந்தியப் பிரதிநிதி திரு. சமன்லால் ஆதரித்தார்.

### சமாதான சகவாழ்வே கொள்கை

இந்தியப் பிரதிநிதி திரு. சமன்லால் மகாநாட்டில் பேசுகையில் சமாதானமும், சகவாழ்வும் தான் இந்தியாவின் கொள்கையென்றும் இந்தியாமீது சீன ஆக்கிரமிப்புச் செய்தது சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கும் நடுநிலைமைக் கொள்கைக்கும் மட்டுமல்ல உலக சமாதானத்துக்கே அபாயமானது என்றும் கூறினர். சீன ஆக்கிரமிப்பு ஆசிய - ஆபிரிக்க ஒற்றுமைக்கே ஆபத்தானதென்றும் திரு. சமன்லால் தெரிவித்தார். இந்தியாமீது சீன ஆக்கிரமிப்புச்செய்தது மட்டுமல்ல உண்மைகளைத் திரித்துக் கூறிவருகிறதென்றும் கூறினர். "சமாதானம் சமாதானம்தான், யுத்தம் யுத்தம்தான், அக்கிரமிப்பு ஆக்கிரமிப்புத்தான். இவற்றை மாற்றி திரித்தோ உண்மையை மறைத்தோ கூறமுடியாது" என்று திரு. சமன்லால் கூறியபோது சபையோர் கரகோஷம் செய்தனர்.

### சிகானுக் நம்பிக்கை

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து முடித்துள்ள கம்போடியப் பிரதமர் இளவரசர் நொரடம் சிகானுக் நேற்றிரவு கல்கத்தாவில் தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரமொன்றில் பேசுகையில் இந்தியா - சீன எல்லைப் பிரச்னைக்குச் சமாதானத் தீரவுகாண்பதற்குத் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்வதாக உறுதியளித்தார். இந்திய மக்களின் கவலையைத் தாம் உணர்ந்துள்ளதாகக் கூறிய இளவரசர் இந்திய மக்களின் ஒற்றுமையையும் நாட்டுப் பற்றையும் பாராட்டினர். இந்திய - சீன எல்லைத் தகராறு மேலும் இரத்தம் சிந்தாமல் சமாதானமாகத் தீரும் என்று இளவரசர் நம்பிக்கை தெரிவித்தார். இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் கிரேக்க மன்னர் போலும் ராணி பிரட்ரிக்காவும் நேற்று அக்ராவிற்கு விஜயம்செய்து தாஜ்மஹாலைப் பார்த்து மகிழ்ந்தனர்.

### நடுநிலைக் கொள்கை மாருது

இந்திய வெளிவிவகார ராஜாங்க மந்திரி திருமதி லட்சுமி மேனன் நேற்று ஒரு கூட்டத்தில் பேசுகையில் சீன ஆக்கிரமிப்பினுல் சமாதான சகவாழ்வுக் கொள்கையையும் நடுநிலைமைக் கொள்கையையும் இந்தியா கைவிட்டுவிடாது என்று கூறினர்.

### குசேலர் மீண்டும் மேயர்

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையின் மேயராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. பி. குசேலரும் உதவி மேயராக திரு. வேதாசலமும் மீண்டும் ஏகமனதாக நேற்றுத் தெரிவுசெய்யப்பட்டனர். நெருக்கடி நிலையை உத்தேசித்து நாட்டின் ஒற்றுமையைக் காட்டும் பொருட்டு மேயர் தெரிவு போட்டியின்றி நடைபெறவேண்டுமென தமிழ்நாடு நிதிமந்திரி திரு. எம். பக்தவத்சலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேயர், உதவி மேயர் பதவிகளுக்கு திரு. குசேலர், திரு. வேதாசலம் ஆகியோரின் பெயர்கள் தவிர வேறு பெயர்கள் பிரேரிக்கப்படவில்லை.

### மதுவிலக்குபற்றி நந்தா

பட்னுவில் ஒருவைபவத்தில் திட்டமந்திரி திரு. குல்சாரிலால் நந்தா பேசுகையில் மதுவிலக்கை ரத்துச்செய்தால் அறநெறியில் இந்தியாவுக்குப் பெருந் தோல்வி ஏற்பட்டுவிடுமென்று கூறினர். மதுவிலக்குப் பிரசாரம் நடைபெறவேண்டுமென்றும் அவர் கூறினர்.

### எதிர்ப்புப் பிரசாரம்

இந்தியாவையும் பிரதமர் நேருவையும் தூற்றும் சீனுவின் பிரச்சார சஞ்சிகைகளும் நூல்களும் பிரசுரங்களும் இந்தியாவுக்குள் இன்னும் வந்துகொண்டேயிருக்கின்றனவென்றும் சீனுவிலிருந்து இந்தியாவுக்கு தபால் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டபோதிலும் இந்தியாவுக்கு வேறு நாடுகள்மூலம் சீன இவைகளை அனுப்பிவருகிறதென்றும் அரசாங்க அதிகாரியொருவர் கூறினர். எல்லைச் சண்டையின்போது கைதுசெய்யப்பட்ட இந்திய வீரர்கள்பற்றி மற்றொரு பட்டியல் செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலம் இந்திய அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது. இந்தப் பட்டியலில் 820 பெயர்கள் உள்ளன.

### சீனப் பிரதமருக்கு சிறிமா கடிதம்

சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய்க்கு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டா[illegible]நாயக்கா புதிய குறிப்பொன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. கொழும்பு மகாநாடு [illegible]வித்த யோசனைகளில் உள்ள இரண்டு அம்சங்கள்பற்றி சீன தெரிவித்த சொந்த விய[illegible]கியானம் சம்பந்தமாக இலங்கைப் பிரதமர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்[illegible]தாகத் தெரிகிறது.

## கனடா அரசாங்கம் தோல்வியடைந்தது

### டிபன்பேக்கர் மந்திரிசபை மீதுநம்பிக்கையில்லாதீர்மானம்

ஒட்டாவா, பெப். 6

திரு. டிபன்பேக்கரைப் பிரதம மந்திரியாகக்கொண்ட கனடாவின் கன்ஸர்வேடிவ் அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றின் மூலம் தோல்வியடைந்தது.

தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக அரசாங்கம் திட்டவட்டமான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லையென்று குற்றஞ்சாட்டி சோஷலிஸ்ட் எதிர்க் கட்சித் தலைவர் திரு. லெஸ்டர் பியர்ஸன் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்திருந்தார். இதை லிபரல் கட்சியும் புதிய ஜனநாயகக் கட்சியும் ஆதரித்தன.

கனடாபாதுகாப்புக்கு அமெரிக்க அணு ஆயுதங்களைப் பெறுவது சம்பந்தமாக கனடா மந்திரிசபைக்குள் நெருக்கடியேற்பட்டதும் இதன் விளைவாகப் பாதுகாப்பு மந்திரி பதவியை ஹார்ப்பினஸ் ராஜினுமாச் செய்தார். இதைத் தொடர்ந்து சோஷலிஸ்ட் எதிர்க் கட்சித் தலைவர் அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தார். லிபரல் கட்சியினரும் சில திருத்தத்துடன் மற்றொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்பட்டு நிறைவேறிவிட்டது.

கனடாவின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்க ஜனதிபதியும் வெளிவிவகார மந்திரியும் தலையீடு செய்துள்ளதாகவும் இது நேசநாடுகளுக்கிடையேயான கோட்பாடுகளை மீறிய செயலாகுமென்றும் திரு. டிபன்பேக்கர் தெரிவித்தார்.

## ஸ்தலஸ்தாபன இலாகாமீது எதிர்க்கட்சியினர் தாக்குதல்

கொழும்பு, புதன்

நேற்று நடைபெற்ற ஜனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில், ஸ்தலஸ்தாபன இலாகா மீது எதிர்க் கட்சியினர் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

### பல விஷயங்கள்

ஜனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில், ஸ்தல ஸ்தாபன இலாகாவில் பல ஊழல்கள் மலிந்துகிடக்கின்றன என்று கூறினர்.

### வீண் செலவு

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில், யாழ்ப்பாண முன்னுள் மேயர் ஒருவரின் காலத்தில் ஏராளமான பணம் வீண் செலவுசெய்யப்பட்டதென்று கூறினர்.

### பாகுபாடு

மத்திய அரசாங்கம், தமக்குப் பணம் ஒதுக்கியதென்றும் ஆனுல் இது கிடைக்கவில்லையென்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஏராளமான தலைவர்கள் எமக்கு முறைப்பாடுகள் தெரிவித்திருக்கின்றனரென்றும் ஆனுல்,ஸ்தல ஸ்தாபன இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் கட்சிப்பாகுபாடு காட்டுகிருர்களென்றும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கூறினர்.

### அதிகாரம் வழங்குக

கொழும்பில் ஏற்படும் வீட்டுத்தட்டுப்பாட்டை, கொழும்பு மாநகரசபையினுல் சமாளிக்க முடியும். வீட்டுப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதற்கு கொழும்பு மாநகரசபை மேயருக்கு அதிகாரம் வழங்கவேண்டுமென்று காலி எம். பி. திரு. டபிள்யு. தஹநாயக்கா பேசுகையில் கூறினர்.

### அடிமை வாழ்வு

ஜாதிக விமுக்தி பெரமுனைத் தலைவர் திரு. ●க. எம். பி. ராஜரத்ன பேசுகையில், அரசாங்கத்துக்குக் கீழ்ப் பணிந்து அடிமையாகவாழ மறுக்கிறவர்கள் துயருறுகிருர்கள் என்று கூறினர்.

### கிராமக்கமிட்டி விவகாரம்

திரு, ருெபர்ட் குணவர்த்தன பேசுகையில் பின்வருமாறு கூறினர். அத்துவகிரிய கிராமக் கமிட்டி, மீண்டும் எல்லைக்குட்படுத்தப்பட வேண்டும். ஆனுல் புதிய 'எல்லை வரையறுத்தல்' காரணமாக, அத்துறுகிரிய கிராமக்கமிட்டிவேறுஒரு கிராமக்கமிட்டிப் பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## லைபீரியாவில் புரட்சித் திட்டம்

### தளபதி கைது

லண்டன், பெப். 6

லைபீரியாவின் சட்டரீதியான அரசாங்கத்தைக் கவிழ்க்கவும் லைபீரிய ஜனதிபதி ஒலிம்பியோவைக் கொலை செய்யவும் நடந்த சதித்திட்டம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக லைபீரிய அரசாங்கம் அறிவித்தது.

இது சம்பந்தமாக தேசியப் படைத் தளபதி உட்பட இதுவரை ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கிராமவாசிகளுக்கு சத்துணவு

சென்னை, பெப். 4

கிராம வாசிகளுக்குச் சத்துள்ள உணவு கொடுக்க, 32 லட்சத்து 87 ஆயிரம் ருபா செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதென்றும் ஏழு மாவட்டங்களில் இத் திட்டம் ஐ. நா. ஸ்தாபனப் பிரிவின் உதவியோடு அமுலாக்கப்பட்டு வருவதாயும் நிதி அமைச்சர் திரு. பக்தவத்சலம் சட்டசபை கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இத்திட்டம் நாளாவட்டத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

## சிங்கப்பூரில் இலங்கையர் கைது

சிங்கப்பூர், வெள்ளி

சிங்கப்பூரிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 111 பேர்களை சிங்கப்பூர் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையாக கைதுசெய்துள்ளனர்.

இலங்கையரான திரு. அருணசலம் மகாதேவாவும் கைது செய்யப்பட்டுள்ளார்.

திரு. மகாதேவா சிங்கப்பூர் தேசிய எழுத்தாளர் சங்கத்தின் பொதுக்காரியதரிசி.

## வருமானம்

ஜெனிவா, பெப் 6

உலகத்தில் 10சதவிகிதமானேர் உலகின் 60சதவிகித வருமானத்தைஅனுபவிப்பதாகவும், 57சதவிகிதமானேர் 10சதவிகித வருமானத்தையே அனுபவிப்பதாகவும் பேராசிரியர் தக்கர் கூறினர்.

## மணி வாக்கு

பட்டினி கிடந்துசோம்பி இருக்கும் மக்கள் முன், வேலையாகவும், வேலை மூலம் உணவு அளிப்பதாக உறுதிகூறும் வகையிலேயும் தான் கடவுளும் தோன்றத் துணிவார்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
தை மீ 25உ (7-2-63)


## தொழில் அமைதி

சென்ற 17 நாட்களாக இலங்கையில் நடைபெற்று வந்த பஸ் வேலைநிறுத்தம் முடிவடைந்தது குறித்து பொதுமக்கள் ஒருவித ஆறுதலடைவர்.

பஸ் போக்குவரத்தை தேச உடைமையாக்கி, இ. போ. ச.வை அமைத்தபோது இதன் மூலம் அரசாங்கத்துக்கு நல்ல வருமானம் கிடைக்குமென்றும் பொதுமக்களுக்கும் மேலான பஸ்சேவை ஏற்படுமென்றும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் இதற்கு நேர்மாருக, இ. போ. ச.வுக்கு வருடாவருடம் பெருந்தொகை நஷ்டமேற்பட்டு வந்துள்ளதுடன், திடீர் வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டு, பொதுமக்கள் முன்னைவிட அதிக சங்கடங்களுக்கு உட்பட வேண்டியதாகஉள்ளது. இது பெரிதும் துரதிருஷ்டவசமாகும்.

பஸ் சேவையை தேசஉடைமையாக்கியபோது பல தொழிலாளர் யூனியன்களும் இ. போ. ச. வுடன் பூரணமாக ஒத்துழைப்பதாக வாக்குறுதியளித்தன. சிப்பந்திகளுக்கு முன்னைவிட மேலான சம்பளத் திட்டமும் வேலைவசதிகளும் கிடைக்க முடிந்தது. என்ருலும் திடீர் வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டுவருவதைப் பார்க்கையில், யூனியன்களின் ஒத்துழைப்பு போதிய அளவு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வேலைநிறுத்தத்துக்கான நியாயம் எப்படி இருப்பினும், யூனியன்கள் சிறப்பாக பொதுமக்களின் நன்மையைக் கவனிக்க வேண்டியவராவர். தாங்கள் திடீர் வேலைநிறுத்தம் செய்தால் பொதுமக்கள் எவ்வளவுதூரம்பாதிக்கப்படுவர் என்பதை சற்றே நிதானமாகச் சிந்திக்க வேண்டும். அவர்கள் தங்கள் நன்மையையும், மதிப்பையுமே பொதுஜன நன்மையைவிடப் பெரிதாக மதித்துள்ளதாகவே கருத வேண்டியுள்ளது. இன்றேல் இப்படித் திடீரென வேலை நிறுத்தம் செய்து 17 நாள் தொடர்ந்து அதை நடத்தியிருக்கமாட்டார்கள்.

இராணுவக் காவலை ஏற்படுத்தியதால் தாங்கள் வேலைநிறுத்தம் செய்ய வேண்டியதாயிற்றென்று சொல்லப்படுகிறது. இ. போ. ச. உடைமைகள் பொதுமக்களின் சொத்தாகும். அவற்றுக்கு நஷ்டம் ஏற்படாதபடி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. யூனியன் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் நெருங்கிய நல்லுறவு இருப்பின் இவ்விஷயமாக ஏற்பட்ட தப்பபிப்பிராயங்களுக்கு இடமின்றியும் வேலைநிறுத்தமே இல்லாமலும் இதைத் தீர்த்திருக்க முடியும்.

இ. போ. ச. சிப்பந்திகள் அனைவருக்கும் ஒரேஒரு யூனியன் இருப்பதற்குப் பதில் ஏன் மூன்று போட்டி யூனியன்கள் இருக்க வேண்டுமென்று தெரியவில்லை. அதிக யூனியன்கள் இருப்பதால் தொழிலாளரிடையே பிளவு ஏற்படுவதுடன், போட்டா போட்டிக் கோரிக்கைகளைக் கிளப்பவும் இதனல் பொதுமக்களின் நன்மை பாதிக்கப்படவும் இடமேற்படுவதாக உள்ளது. பஸ் சேவைக்கு மட்டுமன்றி பொதுவாக ஒருதொழிலுக்கு ஒரு யூனியன் என்ற சட்டத்தை ஏற்படுத்துவதாயின் தொழிலாளருக்கும் அதுபலவிதங்களில் நன்மையாகலாம்.

எல்லா முக்கிய பிரச்னைகளையும் தேசிய அடிப்படையில் தீர்க்க எல்லாக் சட்சியினரின் ஒத்துழைப்பையும் நாடப் போவதாக பிரதமர் அறிவித்தார். தொழில் அமைதி பிரச்னை மிக முக்கியமானதால், திடீர் வேலைநிறுத்தங்கள் ஏற்படாத முறையில், எல்லாக் கட்சியினரும் சேர்ந்து பொதுமக்கள் நன்மையையே முக்கியமாகக் கருதி, தக்கதோர் ஏற்பாட்டுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம். வேலைநிறுத்த ஆயுதம் இருபுறமும் கூர்மையுள்ளது. எளிய தொழிலாளருக்கும் இதனல் பெரும் கஷ்டநஷ்டங்கள் ஏற்படுவதாகும். ஆகவே எல்லாக்கட்சியினரும் சேர்ந்து தொழில் அமைதி விஷயமாக தேசநன்மைக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இதற்கு இந்த பஸ் வேலை நிறுத்தம் தக்க தூண்டுதலாக இருக்குமென்றே நம்புவோம்.

## பௌத்த காங்கிரஸ் சுகாதார திட்டம்

### அமுலாக்கும்படி கோரிக்கை

கொழும்பு, புதன்

அண்மையில் நடைபெற்ற தனது மகாநாட்டில் நிறைவேறிய தேசிய சுகாதார திட்டத்தை அமுலாக்கும்படி அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், சுகாதார மந்திரியைக் கேட்கவிருக்கிறது.

இத் தேசிய சுகாதாரத் திட்டம், டக்டர் ஈ. எம். விஜயராமாவைத் தலைவராகக் கொண்ட சுகாதார விசாரணைக் கமிட்டியினல் தயாரிக்கப்பட்டது.

தேசிய சுகாதாரத்திட்டம் சம்பந்தமாக அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்; நாட்டின் சுகாதாரசேவைகளை நல்ல முறையில், குறைந்த செலவில் நடத்துவதற்குத் தங்களது திட்டம் வகைசெய்கிறது எனவும் பிரிட்டன் ஒரு வருடத்தில் தனிநபருக்கு 14 பவுண்டுகள் செலவழிக்கிறது. இலங்கை 15 ரூபாய் செலவழிக்கிறது. இருந்தபோதிலும் இரு நாடுகளுக்கும் பல வித்தியாசங்கள் உண்டு என்றும் தெரிவித்துள்ளது.

# நின்று போனமூச்சு உடனே திரும்புகிறது

## முதல் உதவி சிகிச்சை பற்றி ஜெர்மனியில் ஆராய்ச்சி

**ஒவ்வொருவருக்கும் "முதல் உதவி" செய்யத் தெரிந்திருந்தால் டாக்டர் வரும்வரை, சுவாசம் நின்றுவிட்டவர்களையும் பிழைக்கச் செய்ய முடியும். இந்த முதல் உதவி சரிவரக் கடைப்பிடிக்கப்பட்டால் ஜெர்மன் வீதி விபத்துக்களில் ஒரு வருடத்தில் காயமடைந்து மரணமடையும் 13,000 பேர்களில் ஐந்தில் ஒரு பங்கினரைப் பிழைப்பிக்க முடியுமாம். மூச்சு நின்றவர் வாயில் தன் வாயை வைத்து பலமாக காற்றை ஊதினல் நின்றுபோன சுவாசப்பை வேலை செய்ய ஆரம்பித்துவிடுகிறதாம். மேற்கு ஜெர்மனியில் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு இத்துறையில் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.**

தக்க சமயத்தில் முதல் உதவி செய்வதால் ஒருவேளை இறக்கும் தறுவாயிலுள்ளவர்கள் கூட உயிர் பிழைக்கலாம். ஒரு தாயார் மரணத்துடன் போராடும் தன் குழந்தையின் பக்கத்திலிருந்து தவிக்கிருள்; டாக்டருக்குச் சொல்லியனுப்பியிருக்கிருள்; ஆனல் அவர் வர நேரமாகிறது. குழந்தை மரித்துவிடுகிறது. அத்தாய்க்கு முதல் உதவி செய்யத் தெரிந்திருந்தால் அக்குழந்தையை டாக்டர் வரும்வரை உயிருடன் இருக்கச் செய்திருக்கலாம். இறக்கும் ஐந்து குழந்தைகளில் நான்கு குழந்தைகளை வாயுடன் வாய் வைத்து மூச்சு செலுத்துவதன் மூலம் உயிர்ப்பிக்க முடியும் என்று ஹாம்பர்க் வைத்திய நிபுணர்கள் சமீபத்தில் ஒரு மகாநாட்டில் தங்கள் கருத்துக்களில் வெளியிட்டிருக்கிருர்கள்.

ஜெர்மன் நாடுகளில் விபத்துக்குள்ளாகி மாண்டுபோகும் 13,000 காயமடைந்தவர்களில் ஐந்தில் ஒரு பங்கினரை வாயுடன் வாய் வைத்துக் காற்றை ஊதுவது மூலம் உயிர்ப்பிக்க முடியமாம்.

இதற்காக இந்த முதல் உதவி முறையை எப்படிச் செய்வது என்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கும்படி செய்யவேண்டியது அத்தியாவசியமாகும் என்று ஹாம்பர்க்கிலுள்ள ஜெர்மன் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் பெர்ன் ஹார்ட் விக்ன கூறியிருக்கிருர். இது சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரசார இயக்கத்திற்கு அவரே தலைவர்.

முதல் முறையாக செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த 2,000 தொண்டர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும். இத்துடன் மட்டுமின்றி மற்றும் அவசியமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய வைத்திய விஷயங்களும் அவர்களுக்குப் போதிக்கப்படும். தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு செயற்கை முறை மூச்சுவிடச் செய்யும் முறை நடத்திக் காட்டப்படும். ஆஸ்பத்திரிகளில் சேவை செய்பவர்களுக்கு மட்டுமின்றி பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் இம் முதல் உதவி முறை கற்றுத் தரப்படும்.

காயமடைந்து அந்த அதிர்ச்சியில் "மூச்சு நின்றுபோன வேளை இம் மாதிரி முதல் உதவி யாவரும் செய்யலாம். இதற்கு விசேஷப் பயிற்சி ஒன்றும் தேவையில்லை" என்று டாக்டர் [illegible] விக்ன கூறுகிருர். சுகாதா[illegible] விஷயத்தில் அக்கறை[illegible]ளவர்கள் ஒரு கைக்குட்டையை வாயில் வைத்து அதன் மேல் காற்றை ஊதலாமென்றும் கூறுகிருர்.

சமீபத்தில் காயமடைந்தவர் ஒருவருக்கு வாயுடன் வாய் வைத்துக் காற்றை உட்செலுத்துவதுமூலம் மரணத்திலிருந்து ஒருவரைக் காப்பாற்றியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். விபத்துநேர்ந்த இடத்தில் ஒரு செஞ்சிலுவை ஊழியர் இம் முதலுதவியைச் செய்து, நினைவிழந்ததுடன் மூச்சும் நின்றுபோன ஒருவரை உயிர்ப்பித்தார்.

கிட்டித்துப்போன வாய்களைப் பிடித்து வாயுடன் வாய் வைத்து சுமார் 15 நிமிடங்கள் வரை காற்றை ஊதியது காரணமாக விபத்துக்குள்ளானவரின் சுவாசப்பை அடைப்பு நீங்கி வேலை செய்ய ஆரம்பித்தது.

இந்த ஒரு சாதாரண முதலுதவி முறையைக்கொண்டு எப்படி ஒரு உயிரைக் காப்பாற்றமுடியும் என்பதை விளக்க இந்த ஒரு உதாரணமே போதும்.

ஒருவர் விடும் மூச்சில் பிராண வாயுவுடன் கரியமில வாயுவும் வெளிப்படுவது காரணமாக இம் முதல் உதவிமுறை அவ்வளவு சிலாக்கியமாக முன்பெல்லாம் கருதப்பட்டதில்லை. ஆகவே சுத்த பிராணவாயுவை உட் செலுத்தும் விசேஷ சாதனத்தையே டாக்டர்கள் உபயோகித்து வந்தனர். ஆனல் இந்தச் சாதனம் ஆஸ்பத்திரிகளில் மட்டும்தான் இருக்கும். காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல அவகாசம் வேண்டியிருப்பதால் உடனடியாக முதல் சிகிச்சை கொடுக்கப்படாத காரணத்தினல் காயமடைந்தவர் மரிக்க நேரிடும். ஆகவே முதலுதவி செய்பவர்கள் நிறைய பிராண வாயுவை மூச்சிழுத்து காயமடைந்தவர் வாயில் ஊதலாம். கரியமிலவாயு மூச்சு விடும் சுவாசப்பையைத் துரிதமாக இயங்க வைக்கும் சக்தி உடையது என்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த வித்தையை அனைவரும் கற்றிருப்பது நல்லது. ஆபத்துக் காலத்தில் ஒருவருக்கொருவர் உதவிசெய்துகொள்ளலாம்.

## காதுநோய் சிகிச்சை

### வேலூரில் ஆராய்ச்சி நிலையம்

வேலூர், பெப். 5

காது கேளாமை காரணங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி நடத்துவதற்கான விசேஷ நவீன சாதனங்கள் கொண்ட பரிசோதனைக் குழு ஒன்று வேலூர் கிறிஸ்தவ வைத்தியக்கல்லூரி ஆஸ்பத்திரியில் அமைக்கப்படுகிறது.

பால்டிமூர் ஜான்ஹாப்கின்ஸ் வைத்தியசாலை ஒத்துழைப்புடன் வாஷிங்டன் தேசிய சுகாதார ஸ்தாபனம் இந்த ஏற்பாடு செய்துவருகிறது. வேலூர் வைத்தியசாலை காதுநோய் வைத்தியப்பகுதியில் ஓர் அறையில் இதற்கான சில விசேட அமைப்புகள் செய்யப்படுகின்றன. எல்லா ஏற்பாடுகளும் செய்துமுடிக்க 3 ஆண்டுகளாகும். செலவுக்கு இப்போதைக்கு இரண்டுலட்சம் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன்

### எழுதுவது

இதுவரைஎன்றும்கண்டிராத ஓர் அரிய காட்சியை நேற்றுக் காலை நல்லூர் கந்தன்கோவில் வாசலில் கண்டேன். நீதி அரசர் ஸ்ரீஸ்கந்தராஜா, நேற்று யாழ்ப்பாண அஸைஸ் விசாரணையை ஆரம்பிக்கு முன்பாக, நல்லூர்க்கந்தன் கோவிலுக்கு வந்து வழிபடுவதாகக் கேள்விப்பட்டதும், நம்யாழ்ப்பாணச் சரித்திரத்தில் முக்கிய இடம் பெறவேண்டிய இக் காட்சியைக்காண ஆவலுடன் அங்கு விரைந்தேன்.

இதுவரை இங்கு எவ்வளவோ நீதிஅரசர்கள் வந்து அஸைஸ்விசாரணை நடத்தியுள்ளனர். ஜஸ்டிஸ் சின்னத்தம்பி, விசாரணை ஆரம்பிக்கு முன், நல்லூருக்கு தனிப்பட்ட முறையில்வந்து, வழிபட்டுச் சென்றதாகக் கேள்விப்பட்டேன். ஆனல் தலையிலே விக், மேலே நீதி அரசருக்குரிய விசேஷ அங்கி, இவற்றுடனே, அரசாங்க ஏஜெண்டும், மற்ற நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் புடைசூழவும், முன்னே மோட்டார் சைக்கிள்களிலும் ஜீப்புகளிலும் பொலிஸ் அணிவகுத்துச்செல்ல, ஸ்ரீஸ்கந்தராஜா, தம்மனைவியாருடனே, அரசாங்க எடுபிடிகளுடன் இக்கோவிலுக்கு வந்து, வழிபட்ட காட்சியைக் காண, ஏதோ முற்காலத்து தமிழ் மன்னர்களின் ஆட்சி மீண்டும் இங்கு வருவதற்கு முன்னேடிபோலத் தோன்றியது.

* * *

கோவில் வாசலில், பூர்ண கும்பம், நான்கு குத்துவிளக்குகள் முதலியவற்றை அழகாக வைத்திருந்தனர். கோவில் காவலர் சைவப்பொலிவுடனே நின்று, நீதிஅரசரை வரவேற்ருர். உச்சிகால பூசை சுமார் அரைமணிநேரம் நடந்தது. அவ்வளவு நேரமும், நீதி அரசரும், பௌத்தரான அரசாங்க அதிபரும், வேறு சமயங்களைச் சேர்ந்த நீதிபதிகளும், வழக்கறிஞர்களும், மேயர், கவுன்ஸிலர், முதலிய பிரமுகர்களும் அங்கு ஒருங்கு சேர்ந்துநின்று தரிசித்த காட்சியை, நம்பமுடியவில்லை. இங்கு சமய சமரசமும் ஏற்பட்டுவதற்கு இது நல்ல சகுனமாக இருக்குமா?

* * *

குருக்கள் மந்திரங்கள் ஓதி, நீதி அரசருக்கு ஆசிகள்கூறி, பிரசாதமளித்தார். ஸ்ரீஸ்கந்தராஜா, இருதேங்காய்களை விடலைபோட்டு, இரு கைகளையும் சிரங்கூப்பி பக்தியுடன் வணங்கி, விபூதி பிரசாதம் வாங்கி, நெற்றியில் இட்டுக்கொண்டார். அவர் முருகனிடம் என்ன வேண்டினரோ தெரியவில்லை. அந்த முருகனே, தம் உள்ளத்தில் கோவில்கொண்டு, தக்க தீர்ப்புகளை அளிக்கவேண்டுமென்று தான் கேட்டுக்கொண்டாரா?

அவரது துணைவியார் பக்கத்திலேயே நின்று, நீதிஅரசரை பக்தமார்க்கத்தில் ஊக்குவித்தது, மங்கையர்க்கரசிரை ஞாபகமூட்டுவதாக இருந்தது.

* * *

நேற்று புனர்பூசத்தன்று, காலை நல்லூர் கோவில் காவலர், வயலிலிருந்து 'புதிர்' நெற்கதிர்களைக் கொணர்ந்தாராம். அவற்றை முறைப்படி எல்லா சுவாமிகளின் பாதங்களிலும் வைத்து, மாலையிலே அவற்றை - புதுநெல்லை அரிசியாக்கி, பொங்கி, வந்தவர்களுக்கெல்லாம், பிரசாதம் வழங்கினராம்.

இந்துக் கோவில்களில் பிரசாதம் வழங்கி, மக்களின் பசியாற்றும் கைங்கரியம் விசேஷமானது. ஊரிலே யாரும் பட்டினிகிடக்காகல், தெய்வம் பார்த்துக்கொண்டால், நமது பிரச்னைகளெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடுமல்லவா?

(5-ம் பக்கம் பார்க்க)

# கட்சித்தலைவர்களுடன் கலந்தாலோசிப்பேன்

## கல்வி மசோதா பற்றி மந்திரி மாமூத் அறிவிப்பு

கொழும்பு, புதன்

தேசிய கல்விக் கமிஷனின் அறிக்கை பற்றி பொது மக்களும் பத்திரிகைகளும் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம் என்றும் இவ்வித கருத்துக்களைத் தாம் வரவேற்பதாகவும் கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வி மசோதாவை சமர்ப்பிப்பதற்கு முன் இவ்விதம் கருத்துக்களைத் தெரிவித்தால் செய்யவேண்டிய திருத்தங்களை முன் கூட்டியே செய்து கொள்ளலாம் என கல்வி மந்திரி அபிப்பிராயம் கொண்டுள்ளார்.

மசோதா பற்றி ஆராய்ந்து கருத்து வெளியிட நியமிக்கப்பட்ட கமிட்டிகள் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. மந்திரி இந்தக் கமிட்டிகளின் உத்தியோகஸ்தர்களை இது பற்றி ஆராய அழைத்துள்ளார்.



திரு. மாமூத்

### கட்சித் தலைவர்களுடனும் ஆலோசிக்கப்படும்

மசோதா தயாரிக்கப்படு முன்னர் இது சம்பந்தமாக அரசியல் கட்சித் தலைவர்களுடனும் தாம் கலந்தாலோசிக்கப் போவதாக கல்வி மந்திரி தெரிவித்தார். சனப்பிரதிநிதிகள் சபையின் நிரந்தரக் கமிட்டியின் கருத்துக்களையும் மந்திரி பெறுவார் என தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட எல்லையுள் இருக்கும் மாணவர் அந்த இடத்திலிருக்கும் பாடசாலைகளிலேயே கல்வி பயில வேண்டும் என்ற விதியையும், ஒரு மதத்தைச் சேர்ந்த மாணவர் வேறு மத சார்புள்ள தனிப்பட்ட பாடசாலைகளில் சேர்ந்து பயில அனுமதிக்கக்கூடாது என்ற விதியையும் நீக்கவேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயல் கமிட்டி தீர்மானித்துள்ளது பற்றித் தமக்கு ஒன்றும் தெரிவிக்கப்படவில்லையென கல்வி மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு மைல் சுற்றளவுக்குள் இருக்கும் பாடசாலைகளுக்கே அந்த எல்லையுள் இருக்கும் மாணவர் செல்லவேண்டுமென ஒரு விதியும் இல்லை என்பதையும் பிரதேச விதி ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே இருக்கும் என்பதையும் தாம் வலியுறுத்திக் கூற விரும்புவதாக மந்திரி எடுத்துக் கூறியுள்ளார்.

# கனடாவில் விரைவில் பொதுத்தேர்தல்

## நம்பிக்கையில்லாத்தீர்மானம் நிறைவேறியதன் விளைவு

ஒட்டாவா, பெப். 6

திரு. டீபன்பேக்கரின் தலைமையிலுள்ள கன்ஸர்வேர்டிவ் அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினால் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்னும் 24 மணிநேரத்துக்குள் கனடா பார்லிமென்ட் கலைக்கப்பட்டு விடுமென்றும் புதிய பொதுத் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெறுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சோஷலிஸ்ட்கட்சியும் லிபரல் கட்சியும் தனித்தனியாகக் கொண்டுவந்த இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தீர்மானத்துக்கு ஆதரவாக 142 வாக்குகளும் எதிராக 111 வாக்குகளும் இரண்டு தடவைகளிலும் கிடைத்தன.

திரு. டீபன்பேக்கர் இன்று கவர்னர் ஜெனரலுடன் கலந்தாலோசனை செய்வார்.

பார்லிமென்ட் இன்னும் 24 மணி நேரத்தில் கலைக்கப்படுமென்றும் புதிய பொதுத் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெறுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சாட்சியத்தில மூன்று விதம்

யாழ்ப்பாணம், வியாழன்

மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக உதவி ஸ்தலஸ்தாபன கமிஷனர் திரு. குணரத்னமுன் சாட்சியமளித்த முன்னாள் நகர மேயர் ஒருவர் வட்டாரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதில்லையென்றும் இப்பொழுது உள்ளதுபோல் 15 வட்டாரங்களே இருந்தால் போதுமென்றும்கூறினாராம். வட்டாரங்களை அதிகமாக்கினால் கண்டவர்களும் சபைக்குள் நுழைந்து சபையின் மதிப்பைக் குலைத்து விடுவார்களென்று அவர் கூறினாராம் பின்னர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கரையூர் மக்களுக்கு பிரதிநிதித்துவம் தேவைதானென்றும் எனவே 17 வட்டாரமாக விஸ்தரிக்கலாமென்றும் அவர் தெரிவித்தாராம் பின்னர் மற்றொரு தூதுகோஷ்டியினரும் உதவியாகச் சாட்சியமளிக்கச் சென்ற போது அந்தத் தூதுகோஷ்டியின் மகஜரில் கூறப்பட்டிருந்தபடி மாநகரசபை வட்டாரங்களை 21ஆக விஸ்தரிக்கவேண்டுமென்று அவர் கூறினாராம்.

## இடைத் தேர்தல

யாழ்ப்பாணம், வியாழன்

நாவற்குழி கிராமசபை 3-ம் வட்டார இடைத் தேர்தலில் இருவர் போட்டியிடுகின்றனர். இளையவன் சிதம்பரம், தம்பு செல்லத்துரை ஆகிய இருவரும் இடைத் தேர்தலில் போட்டியிட அபேட்சை மனு தாக்கல் செய்துள்ளனர்.

---

## பிச்சைக்காரர்

உடுநுவர, புதன்

கண்டி ஸ்ரேஷன் வீதியில், பிச்சைக்காரர்களுக்காக, ஒரு குடியேற்றத் திட்டம் உருவாகி வருகிறது. இத்திட்டத்தை கண்டி மாநகரசபை மேற்கொண்டுள்ளது. பிச்சைக்காரர்கள், தங்களது குடும்பங்களுடனும் மற்றும் நாய்களுடனும் இப்பகுதியில் குடியேறுகின்றனர்.

---

## வழக்கறிஞர் பெரும் அதிர்ச்சி!

### யார் இவர்?

அனுராதபுரம், புதன்

அனுராதபுரம் வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவரான திரு. எப். பி. செனரத்ன ஜே. பி., யு. எம்., தனது அறைக் கதவுகளைத் திறந்த சமயம் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார். ஆமாம், அவரது வீட்டு வராந்தையில் ஒருவர் இறந்து கிடந்தார்!

இவரின் மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கந்தையா விசாரணை நடத்தினர். இறந்தவர், அனுராதபுரத்தில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக இங்கு வந்திருக்கலாமென்று தெரிவிக்கப்பட்டது. அடையாளம் கண்டுபிடிக்கப்படாத இவரது வயது 50 என்று மதிப்பிடப்படுகிறது.

பிரேத பரிசோதனை நடத்தும்படி உத்தரவிடப்பட்டது. இறந்தவர் யார் என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

---

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

தெய்வநீதி, குற்றம்செய்பவர்களுக்கு தண்டனைவிதிப்பதற்கு மட்டுமல்ல, அதன் துணை நம் சமூகவாழ்விலே நம்மில் ஒவ்வொருவருக்கும் எப்போதும் தேவை. அத்துணையுடனே நாம் நமது எல்லா அலுவல்களையும் செய்ய முற்படுவோமானால், நாம் தொட்டதெல்லாம் வெற்றியாகவும், இப்பூவுலகையே தெய்வலோகமாக மாறிவிடவும் முடியலாமல்லவா?

---

## மேளங்களுக்கு தொற்றுநோய்!

### இசங்கை நடன நிகழ்ச்சி ரத்து

கான்பரா, பெப். 8

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியா சென்ற சித்திரசேன நாட்டியக்குவு, கான்பராவில் அளிக்கவிருந்த நடன நிகழ்ச்சி ரத்துசெய்யப்பட்டிருக்கிறது. தொற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர்களது 15 மேளங்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன. பேர்த்திலிருந்து கப்பல்மூலம் அவர்கள் கான்பரா சென்றனர். பதனிடப்படாத தோல்களைக் கொண்ட இம்மேளங்களைத் திருப்பிக்[illegible]டுப்பதா இல்லையா என்னு[illegible] விஷயம் நாளை முடிவுசெய்ய[illegible]டும்.

---

## 'வடபோர்னியோவில் உரிமை கோருவோம்'

மணிலா, பெப். 6

வட போர்ணியோவில் பிலிப்பைன்ஸின் உரிமைசமாதான முயற்சியின் மூலம் நிலைநாட்டப்படும் என்று அந்நாட்டின் ஜனாதிபதி அறிவித்தார்.

# சிறுபான்மைத் தமிழருக்கு மாநகரசபை பிரதிநித்துவம்

## ஸ்தலஸ்தாபன கமிஷனருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வியாழன்

சிறுபான்மைத் தமிழர் ஒரு வட்டாரத்தில் பெரும்பான்மையாக இல்லாதுபோனால் அவர்கள் வட்டாரத் தேர்தலில் வெற்றிபெற்று மாநகரசபை அங்கத்தவர்களாக தேர்ந்தெடுக்கப்படுவது இயலாத ஒரு காரியம். இதனால் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் 6-ம், 7-ம் வட்டாரங்கள் ஒன்றாக இணைக்கப்படவேண்டும் என வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக நேர்விசாரணை நடத்த வந்திருந்த உதவி ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் திரு. டபிள்யு எஸ். குணரத்தினம் முன்னிலையில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தூதுகோஷ்டி சாட்சியமளித்தபோது பொதுக் காரியதரிசி திரு. ஈ. வி. செல்வரத்தினம் சமர்ப்பித்த மகஜர் கோரப்பட்டுள்ளது.

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இரண்டரை லட்சம் பேர் அங்கம் வகிக்கிறார்கள். இலங்கையிலுள்ள தமிழ் சனத்தொகையில் நாலில் ஒரு பங்குக்கு மேற்பட்ட தொகையினராகவுள்ளனர். வடபகுதியில் நிலவிவரும் சாதி வேற்றுமை காரணமாக ஒரு வட்டாரத்தில் சிறுபான்மைத் தமிழர் பெரும்பான்மையாக இருந்தாலன்றி தேர்தலில் அவர்கள் வெற்றிபெற முடியாது.

யாழ்ப்பாண நகரம் இலங்கையின் வடபகுதியிலுள்ள நகரங்களில் பிரதானமான நகரம் என்றபடியாலும் இங்குள்ள சிறுபான்மைத் தமிழர் இங்கு இருக்கும் சனத்தொகையில் நான்கில் ஒருபகுதியினராகவிருப்பதாலும் நமது மகாசபை நகரத்திலுள்ள சிறுபான்மைத் தமிழர் நலன்கருதி கீழ்க்காணும் விஷயங்களை தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறது.

1. ஒவ்வொரு வட்டாரமும் 2000 முதல் 2500 வாககாளர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

2. தற்பொழுது உள்ள 3-ம் வட்டாரம் (கதீட்ரல் வட்டாரம்) சிறுபான்மைத் தமிழர் தமது பிரதிநிதி ஒருவரை மாநகரசபைக்கு தெரிவுசெய்யக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இங்கிருக்கும் மீனவர்கள் உட்பட இங்கு வாக்காளர் தொகை சுமார் 4 ஆயிரமாகவிருக்கிறது. எனவே இந்த வட்டாரம் மீனவர்களின் தொகை குறைவாகவிருக்கக் கூடியதாகப் பிரிக்கப்பட்டு மீனவர்கள்பரம்பரையாக இருந்துவரும்2-ம் வட்டாரத்துடன் இந்தப்பிரிவை (மீனவர்கள்உள்ள) சேர்த்துக் கொள்ளலாம்.

3. இப்பொழுது உள்ள அமைப்பின் பிரகாரம் 6-ம் வட்டாரத்தில் சிறுபான்மைத் தமிழ் வாக்காளரின் தொகை சுமார் 800. அருகிலிருக்கும் 7-ம் வட்டாரத்திலுள்ள (சிறுபான்மைத் தமிழர்) வாக்காளர் தொகை சுமார் 700. எனவே இந்த வட்டாரங்களிலுள்ளன சிறுபான்மைத் தமிழர் நலம்பெறும் நோக்கமாக 6-ம், 7-ம் வட்டாரங்களில் சிறுபான்மைத் தமிழர் இருக்கும் பகுதிகளை ஒன்றாக இணைத்து சிறுபான்மைத் தமிழர் பெரும்பான்மையாகவிருக்கக் கூடிய ஒருபுதிய வட்டாரத்தை உருவாக்கலாம்.

4. 14-ம் வட்டாரத்தில் சிறுபான்மைத் தமிழரின் வாக்காளர் தொகை 1200. இந்த வட்டாரத்தில் சிறுபான்மைத் தமிழர் பெரும்பான்மையானவர்களாகக் கூடியதான அமைப்பை ஏற்படுத்தலாமென மகாசபை கருத்துத் தெரிவிக்க விரும்புகிறது.

5. 8-ம், 9-ம், 10-ம் வட்டாரங்களில் வாழும் சிறுபான்மைத் தமிழ் வாக்காளர்களை ஒரேவட்டாரத்தில் கொண்டுவந்து அவர்களை இந்தவட்டாரத்தில் பெரும்பான்மையினராக்கக் கூடிய சாத்தியமிருக்கிறது.

---

## பொதுச் சந்தை மகாநாடு

### 25-ல் நடைபெறும்

பிரஸல்ஸ், பெப். 6

ஐரோப்பிய பொதுச் சந்தை சபையின் மந்திரிகள் இம்மாதம் 25-ம் திகதி மீண்டும் கூடுவார்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று பிரஸல்ஸில் கூடிய ஆறு பொதுச் சந்தை நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதிகள் மேற்கண்ட முடிவைச் செய்துள்ளனர்.

இம்மாதம் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு, நெதர்லாந்து அரசாங்கம், தனது மந்திரியை அனுப்புவதென்றும் ஆனால் தூதர் ஒருவர் கலந்துகொள்வார் என்றும் நெதர்லாந்து பிரதிநிதி தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இம்மாதம் 11, 12-ம் திகதிகளில் கூடவிருந்த சபைக் கூட்டம், பிரான்ஸின் வேண்டுகோளின் பேரில் 25-ம் திகதி கூடுகிறது.

---

## மந்திரிகள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விக்கு அவரது உதவி மந்திரி பதிலளிக்க முடியுமா எனக் திரு. டி.' சில்வா கேட்டார். அத்துடன் சபையில் மந்திரிகள் எவருமில்லை என்பதையும் உப சபாநாயகருக்கு எடுத்துரைத்தார். கேட்கப்பட்ட கேள்விக்கு மந்திரிகள் இல்லாமல் பதிலை தாங்கள் எப்படிப் பெற முடியுமெனக் கேட்டு, திரு தஹநாயக்காவும், திரு. ராஜரத்னவும் ஆட்சேபம் தெரிவித்தார்கள். மந்திரிகள் சபைக்கு வராதது சபையையே அவமதிப்பதாகும் மென்றும், சபையை ஒத்திவைக்க வேண்டுமென்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

மந்திரிகள், சபைக்கு வராததனால் சபையை ஒத்திப் போடுவது தான் உசிதமெனக் கூறி உப சபாநாயகர் இன்று பிற்பகல் 2 மணிக்கு சபை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார்.

சபை ஒத்திவைக்கப்படும் தறுவாயில் காணிவிவசாய மந்திரி திரு. சி. பி. டி.' சில்வா சபைக்குள் நுழைந்தார்.

---

## ஹேவாஹெட்ட தேர்தல் ஆட்சேபனை

### 8-ம் திகதி தீர்ப்பு

கொழும்பு, புதன்

ஹேவாஹெட்ட தேர்தல் ஆட்சேபனை மனு (திரு. இலங்கரத்தினவுக்கெதிரானது) மீது தீர்ப்பளிப்பதை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நீதிபதி ஹேரத் ஒத்திவைத்திருக்கிறார்.

---

## இனி இலங்கை பிரஜா உரிமை இல்லை?

கொழும்பு, புதன்

1949-ம் ஆண்டுமுதல் இதுவரை மொத்தம் 1,33,300 இந்தியர், பாகிஸ்தானியர்களுக்கு இலங்கைப் பிரஜாஉரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கைப் பிரஜா உரிமைக்கு 8 லட்சம் பேர் இந்தவகையில் மனுக்கொடுத்திருப்பதாகவும் இந்திய பாகிஸ்தானியர் பிரஜா உரிமை சட்டத்தின்கீழ், இதற்குமேல் எவருக்கும் இலங்கைப்பிரஜா உரிமை வழங்கப்படமாட்டாது எனவும், நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

# "சிறுபான்மைத் தமிழருக்கு 3; நாவாந்துறை தனிவட்டாரம்"

## விசாரணைக் கமிஷன் முன் மேலும் பலர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ்மாநகர சபையில் நடைபெற்ற வட்டாரப் பிரிவு சம்பந்தமான சாட்சியத்தில் உள்ளூராட்சி உப அதிகாரி திரு. குணரெத்தினவிடம் நாவாந்துறை சென்நீக்கிலஸ், சேன் மேரிஸ் சனசமூக நிலையங்களின் காரியதரிசிகள் பின்வரும் காரணங்களைக் காட்டி நாவாந்துறை மக்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவத் அளிக்குமாறு கேட்டுக்கொண்னார்.

நாவாந்துறையில் வசிக்கும் சுமார் 1500 கடலோரப்பகுதி மக்களுக்கு இன்றுவரையில் மாநகரசபையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை.

கிராமம் இருகூருகப் பிரிக்கப்பட்டு 11-ம் 12-ம் முஸ்லிம் வட்டாரங்களுடன் இணைக்கப்பட்டிருக்கிறபடியால், நாங்கள் இரண்டு வட்டாரங்களிலும் சிறுபான்மையினராகவே இருக்கிறோம்.

எங்கள் கிராமம் சுகாதார வசதியற்றதாயும், குடியேற்ற வசதியற்றதாயும் இருக்கிறது.

11-ம் 12-ம் வட்டார முஸ்லிம் பிரதிநிதிகள் உட்பட மாநகரசபை அங்கத்தவர்கள் அத்தனை பேரும் குறிப்பாக நாவந்துறைக்கு ஒரு தனிப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதைக் கடந்த பல ஆண்டுகளாக வற்புறுத்தியுள்ளார்.

அரசாங்கமே 11-ம், 12-ம் வட்டாரங்களில் இருந்து நாவாந்துறை வட்டாரம் உருவாக்கப்பட வேண்டுமென்பதை வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது.

திரு. குணரெத்தினவின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில், மாநகரசபை வட்டாரங்களைப் பதினைந்திலிருந்து இருபத்தொன்ருகப் பிரிக்க வேண்டுமென்ற மாநகரசபையின் தீர்மானத்தைத் தாங்கள் ஆட்சேபிக்கவில்லையென்றும் நாவாந்துறைக்கு ஒரு தனிப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதே முக்கிய குறிக்கோள் எனவும் கூறினர்.

### திருவள்ளுவர் மகாசபை சாட்சியம்

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு ஆகக் குறைந்தது மூன்று வட்டாரங்களாவது பிரிக்கப்படல் வேண்டும்என்று அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைச் சார்பில் சாட்சியமளித்த சமாதான நீதிபதி நா. ஆராபலிங்கம், பொ. ஐயம்பிள்ளை, சிறில் முதலானோர் கொண்ட கோஷ்டி தெரிவித்தது.

திருவள்ளுவர் மகாசபைச் சார்பாக மாஜி மேயர் க. பொன்னம்பலமும் கலந்துகொண்டார்.

இப்போது உள்ள 6-ம், 7-ம் வட்டாரங்களுக்குள் அடங்கியுள்ள காந்திநிலையப் பகுதியை தனிவட்டாரமாக அமைக்கவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது.

---

## சிரியாவுடன் ராஜீய தொடர்புகள்

கொழும்பு, புதன்
இலங்கை அரசாங்கம் சிரியா அரசாங்கத்துடன் ராஜீய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

தற்பொழுது பாகிஸ்தானில் இலங்கை ஹைகமிஷனராக இருக்கும் மேஜர் ஜெனரல் ஏ. எம. முத்துக்குமாரு சிரியாவில் இலங்கை ஸ்தானிகராகவும் கடமையாற்றுவார். இவரது வாசஸ்தலம் கராச்சியிலிருக்கும்.

---

## குருஷ்சேவ் வாழ்த்துச் செய்தி

கொழும்பு, புதன்
"சோவியத் ரஷ்யாவுக்கும் இலங்கைக்குமிடையே ஏற்பட்டுள்ள உறவுகள், நாளாந்தம் பெருகி வலுப்பெற்று வருகின்றன. சோவியத்-இலங்கை நட்புறவு வளரவேண்டுமென்பதே எமது ஆசை தங்களுக்கும் தங்களது அரசாங்கத்துக்கும் பொதுவாக இலங்கை மக்களுக்கும் சோவியத் மக்களினதும் அரசாங்கத்தினதும் சார்பாக எமது இதயம் கலந்த சுதந்திரதின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்".

இலங்கையின் 15-வது சுதந்திர தினத்தையொட்டி ரஷ்யப் பிரதமர் திரு. என். குருஷ்சேவ், இலங்கைப்பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

---

## 'மீன்பிடி கார்ப்பரேஷன் தேவையில்லை'

### ஆலோசனைக்கமிட்டி அறிவிப்பு

கொழும்பு, புதன்
மீன்பிடி கார்ப்பரேஷன் ஒன்றை நிறுவ வேண்டுமென மீன்பிடி சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட பார்லிமெண்டரி தெரிவுக்கமிட்டி தெரிவித்த கருத்தை மீன்பிடி ஆலோசனைக்கமிட்டி எதிர்த்துள்ளது.

இப்பொழுது கூட்டுறவு மீன் விற்பனவு யூனியனுல் நடத்தப்பட்டுவரும் மீன்பிடி சம்பந்தப்பட்ட விஷயங்களும் விநியோகம், சந்தைப்படுத்துதல் எல்லாம் திருப்தியாக நடைபெற்றுவருகின்றன என ஆலோசனை சபை காரணம் தெரிவித்துள்ளது.

மீன்பிடி வள்ளங்களும் வலைகளும் தயாரிக்க இங்கு ஒரு உற்பத்திச்சாலை நிறுவப்பட வேண்டுமென சபை அரசாங்கத்தைக் கோர எண்ணியுள்ளது.

தற்பொழுது இந்த உற்பத்தி வேலைகள் சிறிய தொழில் கார்ப்பரேஷன்களாலும் குடிசைக் கைத்தொழில் நிலையங்களாலும் தனிப்பட்டவர்களாலும் செய்யப்பட்டு வருகின்றன.

---

## பவுண் நகையென ஏமாற்றினர்

### எதிரிக்கு 2 வருட கடுங்காவல்

யாழ்ப்பாணம், புதன்
கல்வியங்காட்டைச் சேர்ந்த கார்த்திகேசு சின்னத்தம்பி என்பவர், பவுண் நகையென்று கூறி பித்தளை நகையை அடைவுகடையொன்றில் கொடுத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி, எதிரிக்கு 2 வருடக் கடூழியச் சிறை தண்டனையளித்தார்.

கந்தர்மடம் கே. சின்னத்தம்பியின் அடைவுகடையில், 5 பவுண் எடையுள்ள பித்தளை நகையை அடவுவைப்பதற்காக எதிரியாகிய சின்னத்தம்பி கொடுத்தார். அடைவுகடையிலுள்ளவர்கள் அந்த நகையை உரைத்துப் பார்த்து பித்தளை நகையென்பதை அறிந்ததும் எதிரியை தந்தரமாக அங்கே நிறுத்தி, பொலிசுக்கு தகவல் தெரிவித்தார்கள். பொலிசார் வந்ததும் எதிரியை ஒப்படைத்தார்கள்.

---

## விவேகானந்தர் நூற்ருண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்
விவேகானந்த சுவாமிகள் நினைவுவிழா யாழ்ப்பாணம் திவ்விய ஜீவனசங்க ஆதரவில் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் இம்மாதம் 19-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

திவ்விய ஜீவனசங்க ஆதரவில் பகவத்கீதை வகுப்புகள் நீராவியடி நாவலர் மண்டபத்தில் நேற்று ஆரம்பமாகின. இவ்வகுப்புகள் தொடர்ந்து இம்மாதம் 14-ந் திகதிவரை நடைபெறும். 15, 16, 17 திகதிகளில் கீரிமலை சிருப்பர் மடத்தில் அந்தர்யோகசாதனை நிகழ்ச்சிகள் நடைபெறுமெனத் தெரிகிறது.

---

## ஸ்ருடியோ கிளை திறப்பு

யாழ்ப்பாணம், வியாழன்
'யாழ்ப்பாணத்தில் கைத்தொழில்கள் பெருக வேண்டும். கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். கைத்தொழில்களில் ஈடுபட துணிவும் ஊக்கமும் வேண்டும்' என்று யாழ்ப்பாணம் ஸ்டான்லிவீதியில் கொழும்பு ஸ்ருடியோ கிளையை நேற்றுத் திறந்து வைத்துப் பேசுகையில் திரு கே. பி. ஹரன் கூறினர்.

ஸ்ருடியோ உரிமையாளர் திரு. அ. குகதாசன் அனைவரையும் வரவேற்ருர்.

---

## சமய வகுப்புகள்

உரும்பராய், புதன்
ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய ஆலயத்தில்சைவ சமயவடிப்புகள் நடைபெற்று வருகின்றன. உரும்பராய் இந்துசமயவிருத்திச் சங்க ஆதரவில் நடைபெறும் இச்சமய வகுப்புகளை சைவப்புலவர் திரு. இ. நவரத்தினம் நடத்தி வருகிருர்.

ஆரம்பபிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவென முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இவ்வகுப்புகள் நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளில் சைவ சமயநெறி, பெரியபுராணம், திருக்குறள் ஆகிய நூல்களும் கற்பிக்கப்படுகின்றன.

---

## மருந்து இறக்குமதி கார்ப்பரேஷன் கவனிக்கும்

கொழும்பு, புதன்
மருந்து இறக்குமதியைப் பொறுப்பேற்று நடத்துவதற்காக கார்ப்பரேஷன் ஒன்றை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சினுல் இலங்கையின் சுகாதார சேவைபற்றி அறிவிக்க நியமிக்கப்பட்ட மொரகொட கமிட்டி தெரிவித்திருந்த கருத்துக்கிணங்கவே இந்தக் கார்ப்பரேஷனை நிறுவ அரசாங்கம்முடிவு செய்துள்ளது.

கடந்த சிலவருடங்களாக அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் மற்ற மருந்துச்சாலைகளிலும் அதிகமாக உபயோகிக்கப்படும் மருந்துகள் பற்றுக் குறை[illegible] இருந்துவந்ததைத் தொட[illegible]ந்தே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு வருட முற்பகுதியிலும் வெளிநாடுகளிலிருந்து மருந்துகள் பெறுவதில் தாமதம் ஏற்படுவது இவ்வித தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் தேவையான மருந்துகளை கார்ப்பரேஷனே இறக்குமதி செய்யும்.

---

# செய்தித்திரட்டு

### சுதந்திர திருமணம்

திருமலை, புதன்
சுதந்திர தினத்தன்று, திருக்கோணமலையில் பதினைந்துக்கு மேற்பட்ட திருமணங்கள் நடைபெற்றன.

∴ ∴ ∴

### திருத்தப்பட்டது

திருமலை, புதன்
கடந்த ஆண்டு இரண்டு தடவை தீக்கிரையான இந்துக் கல்லூரியின் ஓலைக்கட்டடம் ஒன்று மீண்டும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட இப்பாடசாலையின் கூரைக்கு இப்பொழுது தகரம்போடப்பட்டுள்ளது.

∴ ∴ ∴

### 'சிலை எமக்குவேண்டும்'

திருமலை, புதன்
1944-ம் ஆண்டு கோணேசர் கோட்டையினுள் கண்டெடுக்கப்பட்ட விஷ்ணு, இலக்குமி ஆகிய இரு கற்சிலைகளையும் அனுராதபுரத்துக்கு கொண்டு செல்லாது திருமலை மக்களிடமே ஒப்படைக்கும்படி திருமலை திருவள்ளுவர் கழகச் செயலாளர் திரு. து. குலவீரசிங்கம் கலாச்சார மந்திரியைக் கேட்டுள்ளார்!

∴ ∴ ∴

### ஒருநேரப் பாடசாலை

பருத்தித்துறை, புதன்
புயலால் சேதமடைந்த மெதடிஸ்த மகளிர் கல்லூரி, காலை 8-30-க்கு ஆரம்பமாகி பிற்பகல் 2-30-க்கு முடிவடையும் ஒரு நேரப்பாடசாலையாக நடைபெறுகிறது. ஹாட்லிக் கல்லூரியில் காலையில் மேல்வகுப்பு மாணவர்களுக்கும், மாலையில் கீழ்வகுப்பு மாணவர்களுக்குமாக இருநேர வகுப்புகள் நடைபெறுகிறது.

∴ ∴ ∴

### வருடவிழா

பருத்தித்துறை, புதன்
பருத்தித்துறை (தும்பளை) லூர்த்துமாதா கோவில் வருடாந்த விழாக்கள் கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகியது. மாதாவின் திருச்சொருப சுற்றுப்பிரகார விழா ஞாயிறு மாலை நடைபெறும்.

∴ ∴ ∴

### பாராட்டுவிழா

உடுப்பிட்டி, புதன்
கரணவாய் தெற்கு தலைமைக்காரர் திரு. ஏ. தாமோதரம் பிள்ளை, கரவெட்டி வடக்கு கிராமதிகாரி திரு. எஸ். கே. சுப்பிரமணியம் ஆகியோர் கிராம சேவகர்களாகத் தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டுமுகமாக, ஒரு பாராட்டு விழாவை நடத்துவதென்று கரவெட்டி மேற்கில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

∴ ∴ ∴

### சங்கம் உதயம்

மட்டக்களப்பு, புதன்
மட்டக்களப்பு நகரசபை எல்லைக்குட்பட்ட பொதுமக்களின் நன்மையை முன்னிட்டும், மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அரசியல் கலப்பற்ற முறையில் தொடர்புகொள்ளவும் "மட்டக்களப்பு வரியிறுப்பாளர் சங்கம்" என்னும் பெயரில் ஓர் புதிய சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

∴ ∴ ∴

### இடமாற்றம்

பருத்தித்துறை, புதன்
புலோலி மெதடிஸ்த கனிஷ்ட பாடசாலை உதவி ஆசிரியை திருமதி ஏ. பி. பொன்னையா, கட்டைவேலி ஞானசிரியர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைப் பாராட்டுமுகமாக பாடசாலை ஆசிரியர்கள் அவருக்குப் பிரிவுபசார விழா ஒன்றினை நடாத்தினர்கள்.

பருத்தித்துறை, புதன்
வடமராட்சிப் பகுதி காரியாலயத் தலைமைக் குமாஸ்தா திரு. அருளானந்தம் தென்மராட்சிப் பகுதிக் காரியாதிகாரி காரியாலயத்துக்கு இடமாற்றப செய்யப்பட்டுள்ளார். திரு. வேலாயுதம், பருத்தித்துறை காரியாதிகாரிகாரியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

### மட்டக்களப்பில்....

மட்டக்களப்பு, புதன்
மட்டக்களப்பில் சுதந்திர தினம், எத்தகைய ஆடம்பரமுமின்றி அமைதியாக அனுஷ்டிக்கப்பட்டது. நகரசபை மார்க்கெட், பொதுவாசிகசாலை கட்டடங்களிலும், பஸ்பிரயாணிகள் தங்குமிடங்களிலும் கறுப்புக்கொடிகள் பறந்தன.

∴ ∴ ∴

### பிரிவுபசார விழா

நீர்வேலி, புதன்
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் திரு. சிதம்பரப்பிள்ளை, பொ. சுப்பிரமணியம் ஆகியோருக்கு ஒரு பிரிவுபசாரவிழா, கல்லூரி மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு. க. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது.

∴ ∴ ∴

### கைது!

பாணந்துறை, புதன்
பறட்ட என்ற இடத்திலுள்ள ஒரு வீதியில், எட்டுத் தார்ப்பீப்பாக்கள் கிடப்பதாக பொதுமராமத்து ஓவர்ஸியர் முறையிட்டதைத் தொடர்ந்து நால்வரை பொலிஸார் கைதுசெய்து ரிமாண்டில் வைத்துள்ளனர்.

∴ ∴ ∴

### விபத்து

வெலிகம, புதன்
40 உல்லாச பிரயாணிகளை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று, கும்பல்கம என்ற இடத்திலுள்ள புகையிரதக் கடவையில் பாதையைவிட்டுவிலகி விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் எவரும் காயமடையவில்லை. ஆனல் பஸ்ஸுக்கு பலத்த சேதமேற்பட்டது.

∴ ∴ ∴

### மாடு திருடினர்

கம்பஹா, புதன்
280 ரூபா பெறுமதியுள்ள காளை மாட்டை திருடிய குற்றத்துக்காக, ஹினகம என்ற இடத்தைச் சேர்ந்த ஐ. மந்திரி என்பவருக்கு, கம்பஹா மாஜிஸ்டிரேட் ஆறுமாத சிறைத் தண்டனை விதித்தார்.

∴ ∴ ∴

### மின் தாக்குதல்

களுத்துறை, புதன்
களுத்துறையிலுள்ள ரப்பர் தொழிற்சாலையொன்றைச் சேர்ந்த டபிள்யு. டி. அமரசேன என்பவர், மின்சாரத் தாக்குதலினல் மரணமானர்.

∴ ∴ ∴

### உதைபந்தாட்டம்

சுன்னகம், செவ்வாய்
சுன்னகம் அர்ச். கிறிஸ்துராசா விளையாட்டுக் கோஷ்டிக்கும் தேவராளை ஜொலிஸ்டார் கோஷ்டிக்குமிடையே சுன்னகம் அர்ச். கிறிஸ்துராசா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கிறிஸ்துராசாகோஷ்டி வெற்றி பெற்றது.

அர்ச். கிறிஸ்துராசா கோஷ்டிக்கு நாலு கோல்களும், ஜொலி ஸ்டார் கோஷ்டி இரண்டு கோல்களும் போட்டன.

மத்தியஸ்தராக திரு. எம். கிறிஸ்துதாசன் கடமையாற்றினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 7-2-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 வாதியக்கோஷ்டி.

இரவு 7-00 கே. அம்பலவாணபிள்ளை—பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 'மனோரஞ்சிதம்-1-'தொடர்நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை, 9-30 குரல் வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 அசைகள் பல விதம்:-பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி சந்தியாவந்தனம் ஸ்ரீநிவாசராவ்-பாட்டு, 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம்.

## அடிக்கல் நாட்டுவிழா

அனுராதபுரம், புதன்

அனுராதபுரம் மாவட்ட சாரணர் தலைமைக் காரியாலயத்துக்கு கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ நேற்று அடிக்கல் நாட்டினார். பலத்த மழை பொழிந்துகொண்டிருந்த போதிலும், அதை அவர் பொருட்படுத்தாமல் அடிக்கல்லை நாட்டும் வைபவத்தில் கலந்துகொண்டார்.

கவர்னர் ஜெனரல், அவருடன் வந்த கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால ஆகியோரை அனுராதபுரம் மாவட்ட சாரணர் சங்கத்தலைவரும் பொலிஸ் சுப்பிரிண்டனுமான திரு. டி. பி. விறபிட்டியா வரவேற்றார்.

## கிளித்தட்டு போட்டி

### நெல்லியடி வென்றது

கரவெட்டி, புதன்

நெல்லியடி சனசமூகநிலைய விளையாட்டு வீரர்களுக்கும், மாதனை விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்குமிடையே நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் தெற்கு வீதியில் கிளித்தட்டுப் போட்டி நடைபெற்றது. நெல்லியடி மாதனையை 8 பழங்களால் வென்றது. நெல்லியடி 9 பழங்கள்; மாதனை 1 பழம்.

மத்தியஸ்தராக திரு. நா. காந்தி கடமையாற்றினார்.

## மாபெரும் தலைவரை சுதந்திரா மறந்துவிட்டது

நாவலப்பிட்டி, புதன்

'இரத்தம் சிந்தாமல் இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு உதவியாகவிருந்த இலங்கையின் முதற் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்காவை இந்நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி திரு டி. எஸ். சேனநாயக்காவை மறந்து விட்டது.

ஐக்கிய தேசியகட்சியின் மஸ்கெலியா கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டு கினிகத்தெனவில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில், முன்னாள் மஸ்கெலியா எம். பி. திரு. டொனல்ட் ஜே. ரணவீரா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கையின் முதற் பிரதமரின் நினைவு மக்கள் எல்லோருடைய மனதிலும் குடிகொண்ட போதிலும் 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறும் சுதந்திர நிகழ்ச்சிகளின் போதுகூட இந்த மாபெரும் தலைவரை நினைவு படுத்தாதது பெரியதொரு வருந்தத்தக்க செயலாகும் என்று கூறினார்,

## அனாதை விடுதிச்சாலை நிர்வாகம்

### விசாரணை செய்யப்படும்

கொழும்பு, புதன்

குழந்தைகள் பராமரிப்பு இலாகா இலங்கை பூராவுமுள்ள அனாதை விடுதிச்சாலைகளில் நடைபெறும் வேலைகள் பற்றிப் பரிசோதனை நடத்த விரைவில் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

இந்த விடுதிச்சாலைகள் பற்றி அதிகமான புகார்கள் தெரிவிக்கபட்டதன் பேரிலேயே இலாகா இவ்வித நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த விடுதிச் சாலைகளில் கடமையாற்றிவரும் உத்தியோகஸ்தர்கள் விடுதிச்சாலைகளின் நலனுக்கு உகந்த விதத்தில் கடமையாற்றுவதில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊர்காவற்றுறையில் துக்கதினம்

### எம். பி. கலந்துகொண்டார்

ஊர்காவற்றுறை, புதன்

சுதந்திர தினத்தன்று ஊர்காவற்றுறைப் பட்டினத்தில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. கிராமப் புறங்களில் நிலைமையில் எவ்வித மாற்றமும் நடைபெறவில்லை.

ஊர்காவற்றுறையில் சில கடைகள் காலையில் திறக்கப்பட்டிருந்த போதிலும், சபைக் காரியாலய மண்டபத்தின் மீதும், வேறு இரு பிரதான இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

திரு.வி.ஏ.கந்தையா எம். பி. ஊர்காவற்றுறை வர்த்தகர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இலங்கை சுதந்திரம் பெற்றாலும், தமிழருக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை. பெரும்பான்மைச் சமூகத்தினரால் நாம் நசுக்கப்படுகிறோம். நமது உரிமையைப் பெறும் வரையும் போராட்டத்தை நடத்திக் கொண்டே போகவேண்டும். சோர்ந்துவிடப்படாது. இன்றைய அரசியல் நிலையில் தமிழர் சந்தோஷப்படக் காரணமில்லை. தமிழருக்குச் சுதந்திரம் கிடைக்கும வரை நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்."

தமது வேண்டுகோளுக்கு இணங்கிக் கடைகளைப் பூட்டியதற்கு திரு. வி. ஏ. கந்தையா நன்றி தெரிவித்துக்கொண்டார்.

## ஆலய புனருத்தாரண

மட்டக்களப்பு, புதன்

கிழக்கு மாகாணத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஆலயங்களுள் ஒன்றான ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத் திருப்பணி வேலைகள் சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. ஆலய புனருத்தாரண வேலைகளுக்கான சகல ஏற்பாடுகளையும் மட்டக்களப்பு எம் பி. செ. இராஜதுரையைத் தலைவராகவும், வைத்திய கலாநிதி செ. பூபாலபிள்ளையைக் காரியதரிசியாகவும் கொண்ட ஆலய திருப்பணிக் குழுவினர் செய்துவருகின்றனர்.

இலங்கையின் பிரசித்திபெற்ற கோணேஸ்வரம், முனீஸ்வரம் ஆகிய பழம்பதிகளின் புனருத்தாரண வேலைகளை மேற்கொண்டுள்ள பிரபல சிற்பி ஏ. தங்கவேலாச்சாரி, இக்கோயிலின் புனருத்தாரண வேலைகளைச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## வகுப்பில் மீன்பிடி?

கொழும்பு, புதன்

மீன்பிடித்தொழிலை அபிவிருத்திசெய்யும் நோக்கத்துடன் பாடசாலைகளில் மாணவர்களுக்கு மீன்பிடித்தொழிலை ஒரு பாடமாகப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டுமென மீன்பிடி ஆலோசனைச் சபை அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளது.

ஆரம்ப வகுப்புகளிலிருந்து பல்கலைக்கழக படிப்புவரை இதனை ஒரு பாடமாகப்போதிக்க வேண்டுமெனவும் சபை கருத்து தெரிவித்துள்ளது.

மீன்பிடிகாரர்களுக்குத் தவிர மற்றவர்களுக்கென மீன்பிடி பகுதிகளில் குடியேற்றத்திட்டங்களை அமுல்நடத்த வேண்டாமெனவும் சபை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.




# குடும்பத்தார் அனைவருக்கும் ஏற்றது

உங்கள் குடும்பத்தார் அனைவரும் ஸல்லை விரும்புவார்கள். குழந்தைகளுக்கு அதன் சுவை மிகவும் பிடிக்கும்—முக்கியமாக அவர்கள் அதை வெறும் பாலைப்போலக் குடிக்க விரும்புவார்கள். ஸல்லை வெறும் நீரில் கலந்தால் போதும், சிறந்த பால் பானமாகும். உங்கள் கணவர் அதைப் பெரிதும் விரும்புவார்—அது அவருடைய டீயையும் கோப்பியையும் அதிகரித்த சுவையுடையவையாக்குகிறது. குடும்பத்தை நடத்திச் செல்லும் நீங்கள் அதற்கு ஆசி கூறுவீர்கள்—ஏனென்றால் ஸல் உங்கள் வேலையை எளிதாக்கும்—அது தானாகவே கரைந்துவிடும். மேலும், அது மிகவும் சிக்கனமானது—பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணம் மிச்சமாகும். அதன் விலையும் சாதாரண மோல்டட் பால்களின் விலையை விட அதிகமில்லை! ஆதலால், இன்றே, உங்கள் குடும்பத்தாருக்கு சுவை மிகுந்த சிக்கனமான ஸல்லை அளியுங்கள்!




ஹார்லிக்ஸ்
தயாரிப்பாளர்களால்
தயாரிக்கப்பட்டது

## ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

## குடும்பத்தார் உடன் விரும்புவது

# ஜூரிமார் சபை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோர் சாட்சியமளித்தனர்.

எதிரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் இராமனுதி பெண் செல்லம்மாவை குறுக்கு விசாரணை செய்தார்:-

வழக்கறிஞர்: போத்தலில் உள்ள கோப்பியை நீர்தான் கிளாஸில் ஊற்றினீரா?

செல்லம்மா: இல்லை.

வழக்: கீழ் கோர்ட்டில் போத்தலில் உள்ள கோப்பியை கிளாஸில் ஊற்றிக்குடிக்க முற்பட்டபோது மணந்ததாக கூறினீரல்லவா?

செல்: இல்லை.

வழக்: இதை நீர் வேண்டுமென்று மறுக்கிறீர்.

செல்: இல்லை.

வழக்: உம்மை ஆஸ்பத்திரியில் எதிரி வந்து பார்த்தாரா?

செல்: ஆம்.

வழக்: வேறு ஆட்களும் வந்து பார்த்தார்கள்?

செல்: ஆம்.

வழக்: அவர்கள் யார்?

செல்: என் சொந்தக்காரர்கள்.

வழக்: சிநேகிதர்கள் இல்லையா?

செல்: இல்லை.

வழக்: எதிரியிடம் இடியப்பம் வாங்கி சாப்பிட்டீரா?

செல்: இல்லை.

வழக்: எதிரியின் புருஷனும் உம்மை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்தாரா?

செல்: இல்லை.

வழக்: எதிரியின் புருஷன் உம்மை ஆசை நாயகியாக வைத்திருந்தாரா?

செல்: இல்லை.

வழக்: எதிரிக்கு கெட்ட பெயர் உண்டுபண்ணும் எண்ணம் உமக்கு உண்டு?

செல்: இல்லை.

கோர்ட்டில் சொல்லத் தகாததைச் சொன்னதாக நீதிபதி ஜூரிகள் சபையைக் கலைத்து, புதிய ஜூரி சபையை ஏற்படுத்தும்படி கூறினர்.

எதிரி, ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு இம்மாதம் 27-ம் திகதி நீதியரசர் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

முடிக்குரிய தரப்பில் திரு. பேக்லீ போல் வழக்கை நடத்தினர். எதிரி தரப்பில் திரு. வி. நடராசாவின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானர். திரு. வல்லிபுரம் எதிரிக்காக அரசாங்கத்தால் ஏற்படுத்தப் பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணைகளைக் கவனிப்பதற்கு ஏராளமான பாடசாலை மாணவ மாணவிகளும் பொதுமக்களும் கூடியிருந்தனர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# பிளவுபடுத்தும் வட்டார விஸ்தரிப்பு வேண்டாம்

## உதவி ஸ்தலஸ்தாபன கமிஷனருக்கு மேயர் தர்மலிங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

'யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டாரங்கள் பிரிக்கப்படும்போது, யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா சிறுபான்மையினத்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும். இல்லையேல் வாக்காளர்கள் தொகையைக்கொண்டு வட்டாரங்கள் பிரிக்கப்படலாம். இவ்வாறு பிரிக்கப்படும்போது ஒரு இனமக்களிடையே பிளவை உண்டாக்கக்கூடாது' என்று யாழ்ப்பாணம் நகரமேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக நேரடி விசாரணை நடத்த வந்திருந்த உதவி ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் திரு. டபிள்யூ. எஸ். குணரத்தினம் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

உதவிக் கமிஷனர் முன்னிலையில் டாக்டர் எஸ. ஏ. தருமலிங்கம் சாட்சியமளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாநகரசபை தோற்றுவிக்கப்பட்ட பின் கடந்த 15 ஆண்டுகளில் வட்டாரப் பிரிவினை நடைபெறவில்லை. அப்போதிருந்த வாக்காளர் தொகையைவிட இப்பொழுது வாக்காளர் தொகை அதிகரித்துள்ளது. கடந்த 1959-ம் ஆண்டிலிருந்து மாநகர சபைக்கு வட்டாரங்கள் பிரிக்கப்படவேண்டுமென்று 4, 5 பிரேரணைகள் வந்துள்ளன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் திரு. கே. எஸ. நடராஜா கரையோர மக்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடியதாகச் செய்யவேண்டுமென்று கொண்டுவந்த பிரேரணையில் எதுவிதமான சூழ்ச்சியும் இல்லை என்று கருதி அதனை ஏற்றுக்கொண்டோம் தற்போது ஸதல ஸதாபனக் கமிஷனரின் நடவடிக்கை கரையோர மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடியதாக பாஷையூர்-நாவாந்துறையை இரண்டாகப் பிரிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் பல சிறுபான்மையின மக்கள் வாழ்கிறார்கள் அவர்களனைவர்க்கும் பிரதிநிதித்துவம் கிடைக்க வழி செய்வதே முறையான செயலாகும். இதனை விடுத்து ஒரு பகுதியினருக்கு மட்டும் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்று கூறுவதில் அர்த்தமேயில்லை.

கரையோரப்பகுதியில் சுமார் 5700 வாக்காளர்கள் இருக்கிறார்கள், இவர்களுக்கு மூன்று பிரதிநிதிகள் இருக்கிறார்கள். சுமார் 3500 முஸலிம் வாககாளர்களுக்கு 2 பிரதிநிதிகள் உள்ளனர். அரியாலையில்உள்ள 3500 வாக்காளர்களுககு 1 பிரதிநிதி மட்டுமே இருககிறார். தாழ்த்தபட்ட 5000 வாக்காளர்களுக்கு 3 பிரதிநிதிகள் இருக்கவேண்டியிருக்க ஒரு பிரதிநிதி மட்டுமே இருககிறார்.

### இவர்களுக்கில்லை

நகைவேலை செய்பவர்களில் சுமார் 2000 வாக்காளர்களிருகிறார்கள். அவர்களுக்குப் பிரதிநிதித்துவமில்லை. கல்வியங்காட்டிலுள்ள 1700 வாக்காளர்களுக்கு அதிர்ஷ்டவசமாக ஒரு பிரதிநிதி உண்டு கிறிஸதவர்களுக்குப் (பாதிரி வேதம்) பிரதிநிதி ஒருவர் உண்டு.

இவ்வாறு பல சிறுபான்மையின மக்கள் வாழ்கின்ற இப்பகுதியில் ஒரு பகுதியினருக்கு மட்டும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கோருவது கோழைத்தனமாகும் 4-ம் வட்டாரத்தை இரண்டாகப் பிரிப்பது தவறாகும். மாநகரசபை வட்டாரங்கள் 28, 27, 25 ஆகவோ பிரிக்கப்படலாம். இதனால் எல்லாச் சிறுபான்மையினர்க்கும் பிரதிநிதித்துவம் கிடைக்க வழி உண்டாகும்.

# "பாரபட்சமான நடவடிக்கையை கைவிடுக"

## கல்விமந்திரிக்கு தந்தி

யாழ்ப்பாணம், வியாழன்

விசேஷ வர்த்தகர் ஆசிரிய பயிற்சி வகுப்பு இவ்வருடமும் தனிச்சிங்கள மொழியிலேயே நடைபெறுமென இம்மாதம் முதலாம் திகதி வெளியான வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருப்பதனை ஆட்சேபித்து அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மஹ்மூத்துக்கு தந்தியொன்று அனுப்பியுள்ளது. அத்தந்தியில் தமிழ்மக்களை நசுக்கும் செயலைக் கைவிட்டு உடனடியாக இவ்வகுப்பைத் தமிழ் மொழியில் நடத்த நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டுள்ளது.

கல்விமந்திரிக்கு இதுவிஷயமாக வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் அனுப்பியுள்ள தந்தியில் 1959ம் ஆண்டிலிருந்தே இத்தகைய பாரபட்சமான நடவடிக்கை நடந்துவருவதாகக் குறிப்பிட்டு அக்குறையை அகற்றும்படி கேட்டுள்ளார்.

கோப்பாய் எம். பி. திரு மு. பாலசுந்தரம்,செனட்டர் ஜி நல்லையா,பலாலி அரசினர் ஆசிரியபயிற்சிக்கலாசாலை அதிபர் திரு. எஸ். கந்தசாமி ஆகியோரும் இதுவிஷயமாகக் கல்வி அமைச்சருக்குத் தந்திஅனுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டம் நாளை நடைபெறும் போது இதுபற்றிய பிரேரணை ஒன்று கொண்டுவரப்படுமென அறியப்படுகிறது.

### வீடு வளவு விற்பனவு

தற்கால வசதிக்கேற்ப வீடும் 2 பரப்பு வளவும் விற்பனைக்கிருக்கிறது. வாங்க விரும்புவோர் 25/2, மணிக்கூடுறேட்டில் வந்து அறிந்து கொள்ளலாம்.

வெள்ளி முதல் திரையிடப்படும்
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!



சிவாஜி கணேசன் - பத்மினி
மற்றும் பலர் நடிக்கும்
புனர்ஜென்மம்
திரைக்கதை-வசனம் ஸ்ரீதர் | டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி | இசை டி.சலபதிர

இப்பொழுது நடைபெறுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (அம்பாறை) விஜயா (மட்டக்களப்பு)
எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
மற்றும் பலர் நடித்த
ராணி சம்யுக்தா
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன் டி. யோகானந்த்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
நாகநந்தினி

மனோகரா (யாழ்ப்பாணம்)
எம். என். கண்ணப்பா, மாதுரிதேவி, வி. என் ஜானகி, நம்பியார், எஸ். பாலச்சந்தர்
மற்றும் பலர் நடித்த
தேவகி



திரு. வி. கணபதிமுத்துவின் வாழ்க்கைத்துணைவி
**தெய்வானைப்பிள்ளை**
தோற்றம் 1879 — மறைவு 1962
ஆண்டு திதி 7—2—63.
"சிவகாமி வாசம்" சித்தங்கேணி

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.